விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | வைகாசி 01 | ஞாயிற்றுக்கிழமை (15.05.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 147

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION

பணப் பரிமாற்றம்

விரைவானது | பாதுகாப்பானது | நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

# ஜே.வி.பியைப் போல் புலிகளும் ஜனநாயகத்துக்கு வரவேண்டும்

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க உரை

(கொழும்பு)

**ஜே.வி.பி. ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்ததைப் போன்று, விடுதலைப் புலிகளும் ஜன்நாயகத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். இவ்வாறு ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார்.**

ஜே.வி.பி. கட்சியின் 40 ஆவது ஆண்டு நிறைவையொட்டி கொழும்பில் நேற்று ஆரம்பமான கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமரசிங்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்,

மக்கள் விடுதலை முன்னணி எவரின் அழைப்பின் பேரிலும் ஜனநாயக அரசியல் நீரோட்டத்திற்கு வரவில்லை. பொதுக் கட்டமைப்பு அல்லது நாட்டின் ஒரு பகுதியை வழங்குமாறு கோரி ஜே.வி.பி அரசியல் நீரோட்டத்தில் இணையவில்லை. எமது சொந்த மாற்றத்தின் பேரிலேயே நாம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் சூடு இளைஞர் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி பதுளை வீதியிலுள்ள கடைத்தெருவில் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 9.30 மணியளவில் இடம்பெற்ற இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் இலுப்பையடிச் சேனையைச் சேர்ந்த 25 வயதுடைய பொன்னையா தமிழ்வாணன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசிப்பவரான இவர், கடந்த சில தினங்களுக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறி செங்கலடிப் பிரதேசத்தில் வசித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன்–அகாசி கிளிநொச்சியில் சந்திப்பு

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி நேற்று கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடைந்த ஜப்பானிய சிறப்புத் தூதுவரை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் வரவேற்றனர்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் பங்குபற்றினர்.

ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசியுடன் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் (12 ஆம் பக்கம் பார்க்க)



## யாழ். இளைஞர் கொழும்பில் கைது

(கொழும்பு)

இலஙனை விமானப்படை விடுதிக்கு அருகாமையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகக் குற்றஞ்சுமத்

## பொதுக்கட்டமைப்பு உருவாகாவிட்டால் மாற்றுத் தீர்வு முன்வைக்கப்படும்

வெற்றிபெற ஜப்பான் உள்ளிட்ட சர்வதேச சமூகம் உறுதுணையாக நிற்கும். இலங்கை

(கொழும்பு)

இலஙனை விமானப்படை விடுதிக்கு அருகாமையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டு தமிழ் இளைஞர் ஒருவர் கடந்த 12 ஆம் திகதி மாலை விமானப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பீற்றர் விமல் சந்திரசேகரம் எனத் தெரியவருகிறது. இவர் தற்போது விசாரணைக்காக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

(இ-4)

# மாற்றுத் தீர்வு முன்வைக்கப்படும்

## யசூசி அகாசி உறுதிபட அறிவிப்பு

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு சர்வதேச நிவாரண உதவிகள் சென்றடைவதற்கான பொதுக் கட்டமைப்பை இலங்கை அரசு உருவாக்காவிட்டால் மாற்று நடவடிக்கைகளை உதவி வழங்கும் நாடுகள் மேற்கொள்ளும் என்று ஜப்பான் விசேட தூதுவர் யசூசி அகாசி அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று மாலை ஊடகவியலாளருடன் அவர் பேசுகையில், இலங்கைத் தீவகத்தில் அமைதி முயற்சிகள் வெற்றிபெற ஜப்பான் உள்ளிட்ட சர்வதேச சமூகம் உறுதுணையாக நிற்கும். இலங்கை அரசியல் வரலாற்றில் இது மிக நெருக்கடியான காலகட்டம்.

போரும் இல்லாமல் உண்மையான அமைதிப் பேச்சுகளுமற்ற சூழல் நிலவி வருகிறது. விரைவில் இந்நாட்டில் நிலையான வழமையான சூழல் உருவாகும்.

கொழும்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறையில்

# அகதிமுகாமில் குண்டுவெடிப்பு குடும்பஸ்தர் ஒருவர் மரணம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றிலுள்ள சுனாமி அகதிமுகாம் ஒன்றில் நேற்று முன்தினமிரவு கைக்குண்டு வெடித்தது. இக் குண்டுவெடிப்பில் குடும்பஸ்தரான சுந்தரம்பிள்ளையான் (வயது 29) என்பவர் பலியானார்.

குறிப்பிட்ட கைக்குண்டு முகாமிற்குள் இருந்து வெடித்ததா அல்லது யாராவது எறிந்தார்களா என்பது குறித்து இதுவரை கண்டறியப்படவில்லை எனவும், இதுதொடர்பாக தாங்கள் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் அக்கரைப்பற்றுப் பொலிஸார் (12 ஆம் பக்கம் பார்க்க)

### உதவி வழங்கும் நாடுகளின்

# கண்டிக் கூட்டம் நாளை ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நாளை கண்டியில் திட்டமிட்டபடி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு இதுவரை காலமும் வெளிநாடுகளிலேயே நடைபெற்றது. இம்முறை முதல் முதலாக இலங்கையில் நடைபெறுகின்றமையினால் இக் கூட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது.

மாநாட்டில் (12 ஆம் பக்கம் பார்க்க)

SWISS
Mineral Water

Buy Swiss Mineral and win several lakhs worth of prices



Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அமெரிக்க உதவிகள் எவையும் சென்றடையவில்லை

## அமெ. மருத்துவப் பேராசிரியர் சாடல்

இலங்கையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு அமெரிக்காவின் எந்த ஒரு நிதியுதவியும் சென்றடையவில்லை என அமெரிக்காவின் கொர்னெல் மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் ஜெனிபர் றொபேர்ட்ஸ் அம்மையார் குற்றம் சாட்டியுள்ளார்.

நியூயோர்க் நகரத்தில் உள்ள கொர்னெல் கல்லூரியில் பணியாற்றும் இப் பேராசிரியர் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையை மூன்று வாரங்கள் நேரில் பார்வையிட்டு அமெரிக்கா திரும்பினார்.

அங்கு நிகழ்வு ஒன்றில் பேராசிரியர் ஜெனிபர் றொபேர்ட்ஸ் உரையாற்றுகையில்,

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீள்வதற்காக ஆலோசனைகளை வழங்குகிற பணியில் இருப்போருக்கான பயிற்றுநராகவே நான் இலங்கைக்குச் சென்றேன்.

ஆழிப்பேரலையால் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு அமெரிக்க நாட்டின் எந்த ஒரு நிதியுதவியும் இதுவரை சென்றடையவில்லை.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு பெருமளவிலான நிதி உதவிகளை அனுப்பிய போதும் வடக்கு-கிழக்குத் தமிழ்மக்களுக்கு அந்த நிதியுதவிகள் சென்றடையவில்லை. அவற்றை இலங்கை அரசு தடுத்துவிட்டதுடன் அதனை தென்னிலங்கையின் அபிவிருத்திக்கும் தனது நலனுக்காகவும் எடுத்துக் கொண்டது எனத் தெரிவித்தார்.

ஆனாலும் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு நான் அதிக மரியாதை செலுத்துகிறேன். ஏனென்றால் தங்களிடம் இருக்கிற குறைந்த வளங்களை வைத்துக் கொண்டு தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

ஒரு அமெரிக்கக் குடிமகளாக இருப்பதில் நான் பெருமைப்படுகிறேன். ஆழிப்பேரலைக்காக அமெரிக்கா பெருமளவு நிதியுதவி கொடுத்தது என்பதற்காக ஆனால் இலங்கையின் அனைத்து பகுதி மக்களையும் இந்த நிதியுதவி சென்றடையவில்லை. தமிழக் குழந்தைகளின் கல்விச் சூழலிலும் கூட இலங்கை அரசு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

பெருமளவிலான நிதியுதவி கொழும்பிலே குவித்து வைக்கப்பட்டிருப்பதை நான் அவதானித்தேன். இதற்குக் காரணம் இலங்கை அரசின் தலையீடு மற்றும் ஊழல் ஆகியவைதான். அங்கு அதிகம் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளுக்கும் நான் சென்று பார்வையிட்டேன்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தம்மால் இயன்ற அளவில் மிகச் சிறப்பான மீளமைப்புப் பணிகளை மேற்கொண்டு வந்தது. இந்த மீளமைப்புப் பணிகள் எல்லாம் ஒரு ஒழுங்கமைப்பின் கீழ் மிகத் திறமையாக இருந்தன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டிருந்த குழந்தைகளுக்கான கல்விக்கூடங்களை உருவாக்கியிருந்ததுடன் தாற்காலிக குடியிருப்புகளையும், மீனவர்களுக்காக படகுகளையும் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியது.

தென்னிலங்கையில் அமெரிக்காவின் உதவிகளைப் பெருமளவில் காண நேரிட்டது. ஆனால் வடக்கில் ஒரு இடத்தில் கூட அமெரிக்கக் கொடியைக் காணவில்லை. நோர்வே, ஜேர்மனிய உதவிகள் மட்டுமே சில இடங்களில் அங்கு வழங்கப்பட்டு வந்தது எனத் தெரிவித்தார்.

நிகழ்வில் பார்வையாளர் ஒருவர், தமிழ்மக்களுக்கான நிதி உதவிகளை அளித்தால் அது அவர்களுக்கு எந்த வகையில் பாதுகாப்பாக சென்றடையும் என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த பேராசிரியர் ஜெனிபர் றொபேர்ட்ஸ் அம்மையார், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்கிற அமைப்பு அங்கே உண்மையாக உள்ளார்ந்த புரிதலுடன் இயங்கி வருகிறது. தமிழர்களுக்கு எப்படி உதவ வேண்டும் என்பதை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருககிறார்கள். மக்களுக்கு உதவுவதில் தங்களை புனர்வாழ்வுக் கழகம் முழுமையாக அர்ப்பணித்திருக்கிறது எனத் தெரிவித்தார். (ற-4,9)

## கலைஞர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையினால் எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் நடாத்துவதற்கு ஏற்பாடாகியுள்ள கலாசாரப் பெருவிழாவில் நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட "மூத்த கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது".

எனவே, நல்லூர் பிரதேச செயலகப பிரிவிற்குட்பட்ட வயது முதிர்ந்த கலைச்சேவை ஆற்றி வரும் கலைஞர்களது விபரங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்பாக நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் கேட்டுள்ளார். (ற)

## பதவி வெற்றிடம்

(சாவகச்சேரி)

கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் கிழுள்ள கரையோரம் பேணல் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள 72 "உதவியாளர்" பதவிகளுக்கு பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவற்றில் சட்ட அலுவலர் பதவிக்கு இருவரும் திட்ட உதவியாளர் பதவிக்கு 36 பேரும் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு 34 பேரும் தேவைப்படுகின்றனர்.

18-45வயதுக்கு இடைப்பட்டபட்டதாரிகள் இவ் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். அரச மாகாண சேவையில் உள்ளவர்களுக்கு இவ் வயதெல்லை ஏற்பாகாது.

விண்ணப்பங்கள் இம் மாதம் 26 ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் பணிப்பாளார், கரையோரம் பேணல் திணைக்களம், 14ஆம் மாடி, புதிய செயலகக் கட்டடம், மாளிகாவத்தை கொழும்பு -10 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும். (க-7-21)


BOC

## இலங்கை வங்கி

### பகிரங்க ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30-04-2004 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாணம் மேற்தரக் கிளையில் இம்மாதம் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத் தருகின்றோம்.

- யாழ்ப்பாணம் மேற்தரக் கிளை
- யாழ் .இரண்டாம் கிளை (ஸ்ரான்லி வீதி)
- பருத்தித்துறை
- மானிப்பாய்
- சுன்னாகம்
- திருநெல்வேலி

இந் நகைகள் மீட்கப்பட வேண்டிய கடைசித் திகதி 27.05.2005.

அறிவித்தலின்றி ஏல விற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

15.05.2005

உதவிப் பொது முகாமையாளர்
(வடபிராந்தியம் - யாழ்ப்பாணம்)

(C/1325)


## இராசிபலன்

15.05.2005
(வைகாசி 1, ஞாயிற்றுக்கிழமை)
சப்தமி பின்னிரவு 12.14 மணிவரை
பூசம் காலை 7.25 மணிவரை
இராகுகாலம் 4.23- 5.53 மணிவரை
சுபநேரம் 8.53 - 10.23 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | ரோகநிலை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், தாய்வழி உறவு, மனச்சோர்வு. |
| இடபம் | கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, போசன சுகம், பெருமையடைதல். |
| மிதுனம் | வாக்குவாதம், காரியதடங்கல், அமைதிக் குறைவு, அதிக செலவு. |
| கடகம் | சிந்தனை் மிகுதி, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| சிங்கம் | காரிய அலைச்சல், சுபசெலவு, உறவினர் வெறுப்பு, அமைதிக்குறைவு. |
| கன்னி | குடும்ப மகிழ்ச்சி, விருந்துபசாரம், எடுத்த கருமங்கள் கைகூடும், தெய்வசிந்தை. |
| துலாம் | அதிகாரம், செய்தொழில் நன்மை, நல்ல செய்தி, காரிய அனுகூலம். |
| விருச்சிகம் | புதிய முயற்சி, கட்டுப்பாடு, ரோகநிலை, பிரயாண சிந்தை. |
| தனுசு | நண்பர்கள் விரோதம், பிரயாணக் கஷ்டம், உடல்நலக்குறைவு, தெய்வசிந்தை, |
| மகரம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம், போசன நன்மை, அபூர்வ சந்திப்பு, |
| கும்பம் | காரிய அனுகூலம், நல்ல செய்தி, ஆரோக்கியம், புதிய தகவல். |
| மீனம் | மனப்பதட்டம், முயற்சி தடங்கல், வீண பகை, சொத்துப் பிணக்கு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

## மாடுகள் கொல்களத்தால் மக்கள் பெரும் பாதிப்பு

(துன்னாலை)

கரவெட்டி துன்னாலை வேர கொண்டை மயானத்திற்கருகே அமைக்கப்பட்டிருக்கும் மாடுகள் கொல்களத்தால் மககளுக்கு பாரிய அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

ஐந்து கிராம மக்கள் பயன்படுத்தும் இம் மயானத்தில் இக் கொல்களம் தற்போது அமைத்துள்ளதால் மிருகக்கழிவுகள் அழுகி துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் இறுதிக்கிரியைகள் செய்ய வருவோர் பெரும் அசௌகரியங்களை சந்திக்க நேரிடுகின்றது.

அத்துடன் அருகே 50 யார் தொலைவில் கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியும், இந்து ஆலயமும் அமைந்துள்ளன. பாடசாலைக்கு அருகே காணப்படும் இக் கொல்களப் பகுதியில் விலங்குக்கழிவுகளை உண்ணவென வரும் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளும் அதிகமாகவுள்ளதால் மாணவர்கள் அவ்வீதியூடாக செல்ல அஞ்சுகின்றனர்.

அண்மையில் இரண்டு மாணவர்கள் மேற்படி நாய்களால் கடியுண்டு பாதிக்கப்பட்டுள்ளனர். இது விடயமாக அப்பகுதி பிரதேச சபைக்கும் சுகாதார பிரிவுக்கும் பலமுறை முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் அக்கிராம மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர். (க-101,7)

## வடமராட்சியில் தொடரும் சட்டவிரோத மண் அகழ்வு

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதியில், குறிப்பாக வல்லிபுரம், குடத்தனை, செட்டியகாடு பகுதிகளில் தொடர்ந்தும் சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெறுவதால் கடல் நீர் உட்புகும் அபாயநிலை தென்படுகின்றது.

இப்பகுதிகளில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள போதிலும், அவர்கள் கடமையில் இல்லாத வேளைகளிலும் இரவு வேளையிலும் மண் அகழ்வில் பலர் ஈடுபடுகின்றனர்.

அத்துடன், கப்புதூ பகுதியூடாக மணலை கடத்திச் செல்லும் நபர்கள் பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுத்துவிட்டு தப்பிச் செல்கின்றனர் என்றும் இலஞ்சம் கொடுக்க மறுப்பவர்களை மட்டுமே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதாகவும் பொது அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன. (க-7,101)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(சுதுமலை)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளான திருநெல்வேலி, கோண்டாவில், கொக்குவில் பகுதிகளில் கடந்த இருவாரங்களில் மட்டும் சுமார் 52க்கும் அதிகமான கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் பொதுச் சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார். (க-252)


## விவாத அரங்கு - 8

விடயம்

நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம்:
- சீரழிந்துள்ளது.
- சீர்பெற்றுள்ளது.

நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி
திரு.சி.சிவநேசன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# இன்னல்களின் மத்தியிலும் இல்லாதவர்க்கு உதவுகின்ற மனநிலை இன்பத்தையேதரும்

## பரமபிதா காட்டிய பாதை

**அபீர் ராஜன்**

என்ன செய்தாலும் உலகம் தன்னைப் புகழவேண்டுமென்றே பெரும்பாலானோர் ஆசைப்படு



கின்றார்கள். எப்படியான யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் இறுதி முடிவு என்னுடையதே என்று அதிகாரத்தில் உள்ளவர்கள் கொக்கரிக்கின்றார்கள். உண்மைகள் எதுவாக இருந்தாலும் நாம் சொல்வதே சரியானது என்று பணம் படைத்தவர்கள் செயல்புரிகின்றார்கள. நாம் நினைத்தால் போற்றுவோம், வேண்டாமென்றால் தூற்றி ஒதுக்குவோம் என மக்களைத் தூண்டிவிடும் நய வஞ்சகர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

இயேசு ஜெருசலேமுக்குள் வரும் பொழுது மக்கள் "ஓசன்னா, ஓசன்னா, தாவீதின் குமாரனுக்கு ஒசன்னா" என்று வாழ்த்துக்கள் கூறி தமது ஆடைகள், போர்வைகளையெல்லாம் நிலத்திலே விரித்து அவரை வரவேற்றார்கள், புகழ்பாக்கள் பாடினார்கள். அதே கூட்டம் இன்னும் சில நாட்களின் பின் "இவனைச் சிலுவையில் அறைந்து கொல்லும் கொல்லும்" எனறு மரணத் தீர்வையை பிலாத்து வழங்கக் காரணமாகவும் அமைந்தார்கள்.

### எம்மிடையே 'பிலாத்துகள்' இல்லையா?

நீதிக்குப் புறம்பான செய்கை, நியாயமில்லாத கூக்குரல்கள் அதிகாரத்துக்குப் பயந்தான். நன்கு ஆராயாமலே இயேசுவை மரணத்துக்குத் தீர்வையிட்டு "இந்த நீதிமானின் பழி என்னிலும் எனது சிந்தையிலும் அணுகாமல் இருக்கக் கடவது" என்று கைகழுவி தன்னை நீதிமான் என்று உலகிற்குக் காட்டிக்கொண்டான்.

பதவி பறிபோய்விடும், பணவரவு குறைந்து போய்விடும், உற்றார் சுற்றம் உதவிபோய்விடும், ஊரிற் பெரியவர் என்ற உரிமைபோய் விடும்,மாலை மரியாதை மாண்பாளர் என்ற மகிமை போய்விடும் என்று போலி வாழ்க்கை வாழ்பவர்கள் எத்தனை பேர்? வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும் வையகத்தில் இயேசுவின் மனநிலையைக் கொண்டுவாழ்வோர் எத்தனை பேர்?

### சீமோன்களும், வெரோணிக்காள்களும் இல்லையா?

சிறுக்கட்டி பெருக வாழவேண்டும் என்பதற்கொப்ப, தனது இயலாமையிலும் இல்லாமையிலும் பிறரின் துன்பங்களில் தாமும் இயன்றளவு கைகொடுத்துதவும், இயேசுவோடு சிலுவையைத் தூக்கி உதவி செய்த சீமோனைப் போன்றவர்களும் எம்மிடைட்யே இல்லாமல் இல்லை.

அடுத்தவர் வேதனையில் தவிக்கையில் நானும் ஒரு சிறிய ஆறுதலைக் கொடுப்பேன். இரத்த வியர்வை நிறைந்திருந்த இயேசுவின் முகத்தை சிறிய துண்டினால் துடைத்துதவிய வெரோணிக்கள் போன்ற துணிவுடை ஆறுதல் கொடுப்பவர்கள் எம்மிடையே இல்லாமல் இல்லை. இவர்களின் செயல்களை உலகம் கண்டுகொள்வதில்லை. விளம்பரத்தில் போட அவர்கள் பணமோ, பட்டங்களோ இல்லாதவர்கள். பணமும், பகட்டும், புகழும் துள்ளி விளையாடும் உலகில் இன்று.... சீமோன்களாக, வெரோணிக்காள்களாக இறைவனுக்குகந்த வாழ்க்கை வாழ அனேகருக்கு விருப்பமில்லை.

### மனமாற்றம் பெற முயற்சிப் போம்

கடவுள் வடிவில் விளங்கிய அவர்... சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச்சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மைத் தாழ்த்தினார். (பலி: 2:6-8) மாபரன் பாமரன் ஆனார். ஆனால் பாமரனின் ஆசை???

ஆலயங்களுக்கு பகட்டுடை அணிந்து செல்கின்றோம். இது ஆராதனைக்கா? வழிபாட்டுக்கு வந்து வசைபாடிக் கொண்டிருக்கின்றோம். இவற்றிலும் வராமல் இருப்பதுவே மற்றவர்க்கு நலமாக இருக்கும். நாங்க்ள் என்ன பரிசேயர்களா? அல்லது மறைநூல் வல்லுநர்களா? இயேசுவுக்கு தண்டனை கொடுக்கச் சொன்னவர்கள் போல, கடவுளுக்கு பயப்படாத தலைமுறைகளாக மாறிக்கொண்டு வருகின்றோம்.

நாம் என்ன சொன்னாலும் பாவிகள். ஆனால் இறைவன் நினைத்தால் எங்களைப் பரிசுத்தர்களாக ஆக்கவல்லவராக இருக்கிறார். மனம் மாறி சக்கேயுவைப்போல், பாவிப்பெண்ணைப் போல் இறைவனுக்கு ஏற்புடையவர்களாக, இறைவனை உருக்கமாக வேண்டிக் கொள்வோம். □

## சுயதொழில் முயற்சிக்கடன்

(பொன்னாலை)

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட நிறுவனத்தினரின் அனுசரணையோடு வலி-மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கப்படவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில்- சுயதொழில் முயற்சிக் கடனைப் பெற விரும்பும் குடும்பங்கள் தத்தம் பிரிவு கிராம சேவையாளர்களைச் சந்திக்குமாறு வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கேட்டுள்ளார்.

மேற்படி, சுயதொழில் முயற்சிக் கடனை சங்கானை ப.நோ.கூ.சங்கத்தின் ஊடாகவே நடைமுறைப் படுத்துவதற்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனம் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது. (க-7-49)

## நிறைவு பெறும் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வரணி வடக்கு மாதர் அபிவிருத்தி சங்கக் கட்டடத்தில் யாழ்.மாவட்ட தொழில்துறைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டதும் பொருள் உற்பத்தி தொடர்பான மூன்று மாதப் பயிற்சி இன்றுடன் நிறைவு பெறுகின்றது. அவ்விடத்தைச் சேர்ந்த 30 பெண்கள் இப் பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களால் தும்பைக் கொண்டு செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் வரணி வடக்கு மாதர் அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. (ற-19)

## விளையாட்டுப் போட்டி

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் வருடாந்த தடகள விளையாட்டுப்போட்டி இன்று பி.ப.2.00 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-19)

# உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்குக!

## இராணுவ நெருக்குவாரங்களுக்குட்பட்ட மண்டைதீவு மக்கள் க.கா. குழுவிடம் வேண்டுகோள்

(மண்டைதீவு)

மண்டைதீவில் சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்த 1200 பேர் வரை இராணுவத்தின் பல்வேறு நெருக்குவாரங்களுக்கு உட்பட்டு வாழ்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

இது விடயம் தொடர்பில் மண்டைதீவு புனித பேதுருவானவர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

அம் மகஜரின் விபரம் வருமாறு,

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால், அங்கு குடியிருக்கும் ஏறக்குறைய 300 குடும்பத்தைச் சேர்ந்த 1200 பேர் பல்வேறு நெருக்குவாரங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். இவ்வகை இராணுவ நெருக்குவாரங்கள், எம்மக்களை கோழைத்தனமாக மனிதக் கேடயங்களாகப் பாவிக்கும் உள்நோக்கம் கொண்டவை.

அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அங்கு குடியிருப்பவர்கள் படைத்தரப்பினரிடம் பதிந்து குடியிருப்பதற்கு அனுமதி பெற்றிருக்க வேண்டும். கடற்றொழில் செய்வதற்கு நேரம் குறித்து, அனுமதி பெறவேண்டும். குடும்ப தனிப்பட்ட முக்கிய நிகழ்வுகளுக்கு முன்கூட்டியே 15 நாட்களுக்கு முன் அனுமதிபெறவேண்டும். அனுமதி மறுக்கப்பட்டதும் உண்டு.

மண்டைதீவிற்குள் கடல்நீர் உட்புகாமல் தடுப்பதற்கு அணை ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தது. மக்கள் முன்னர் குடியிருந்த வீடுகளை உடைத்துக் கட்டடப் பொருட்களைக் கொண்டு 22.04.2005 அன்று தமது காவலரண்களைப் பலப்படுத்தினர். பின்னர், மண் அணையை 06.05.2005 உடைத்தனர். 09.05. 2005 அன்று மக்கள் ஒன்றுகூடி எதிர்ப்புத் தெரிவித்த போது மக்களைத் தாக்குவதற்குத் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தினர்: தற்காலிகமாக வேலைகள் நிறுத்தப்பட்டாலும் மீளவும் தடுப்பு அணைகள் உடைக்கப்படலாம்.

எமது சொந்த வீடுகள் (50) அவர்களால் கையகப்படுத்தப்பட்டுள்ளதால், நாம் அகதிகளாக ஓலைக் குடிசைகளில் வாழுகின்றோம். மேற்கூறிய காரணங்களால் மனித உரிமைகளை இழந்து சுதந்திரமற்ற வாழ்க்கையை நாம் தொடர விரும்பவில்லை.

ஸ்ரீலங்காப்படைகளது இத்தகைய நெருக்குவாரங்கள் போர் நிறுத்த உடன்படிக்கை மீறல்களாகும்.

எனவே, எமது அன்றாட வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக உள்ள உயர்பாதுகாப்பு வலயமும், ஸ்ரீலங்காப்படைகளும் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும். எமது நெருக்குவாரங்கள் அற்ற சுதந்திரமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டிய கடமை தங்களுக்குமிருப்பதால் இவ்விடயங்களை தங்களது கவனத்திற்கும், நடவடிக்கைக்கும் தருகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# இலங்கை - பாகிஸ்தானிடையே முதலீட்டு வாய்ப்புக்கள் ஏற்படும்

(கொழும்பு)

இலங்கை - பாகிஸ்தான் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் படி பல இருதரப்பு முதலீட்டு வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுமென வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இவ் வர்த்தக உடன்படிக்கை மூலம் ஆகக் கூடுதலான நன்மைகளைப் பெறுவதற்கு உள்ளூர் வர்த்தகர்கள் முன்வர வேண்டுமென்று அவர் கேட்டிருக்கிறார்.

இதேவேளை, கொழும்பில் நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற இலங்கை- பாகிஸ்தான் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் இரண்டு நாள் கூட்டத்தில் கலந்து கொண்ட, பாகிஸ்தான் வர்த்தக அமைச்சர் குமாயூன் அக்தார் கான், முதலாவது சுதந்திர வர்த்தக உடன் படிக்கையின் கீழ் வறுமையையும் பட்டினியையும் போக்குவதற்கு இரு நாடுகளுக்கும் வாய்ப்புக்கள் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். (க-7)

# தாயாரைக் காணவில்லையென மகன் ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

குடும்பப் பெண்மணி ஒருவரைக் காணவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரணி நாவற்காட்டைச் சேர்ந்த பரராஜசிங்கம் இலட்சுமிபிள்ளை பராசத்திபிள்ளை (வயது -52) என்பவரை கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதியில் இருந்து காணவில்லை. அவரது மகன் பரமேஸ்வரன் நேற்று முன்தினம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட குடும்பப் பெண் தனது கணவன் இறந்ததால் வரணியில் உள்ள சகோதரனது வீட்டில் வாழ்ந்து வந்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நபர் தொடர்பான எவரேனும் தகவல் அறிந்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு அறியத்தரும்படி கேட்கப்பட்டுள்ளது. (ற-19)

# தமிழ்ப் பாடசாலைகளில் ஆங்கிலேயர் கலாசாரத்தை ஏன் பின்பற்ற வேண்டும்?

## ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா கேள்வி

(மட்டக்களப்பு)

தமிழ்ப் பாடசாலைகளில் ஆங்கிலேயர் கலாசாரத்தை ஏன் பின்பற்ற வேண்டும்? தமிழ் மாணவர் ஏன் கழுத்துப்பட்டி அணிய வேண்டும்?

இவ்வாறு பாண்டிருப்பு அறநெறி விழாவில் உரையாற்றிய அகில இலங்கை இந்து விருத்திச் சங்கத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி தந்திர தேவா கேள்வியெழுப்பினார்.

பாண்டிருப்பு கலைவாணி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் அறநெறிவிழா கடந்த ஞாயிறன்று அதிபர் விமலா கிருபைராஜா தலைமையில் பாண்டிருப்பு இந்துமகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அங்கு சுவாமி தந்திரதேவா மேலும் பேசுகையில்,

வடக்கோ, கிழக்கோ, வடகிழக்கோ எது எப்படி என்றாலும் இப் பூமி சிவபூமி என்கிறோம். இங்கு சைவ கலாசாரத்தை முறையாகப் பின்பற்ற வேண்டும்.

வெளிநாடுகளில் உள்ள மாணவர்கள் வேட்டி அணிந்து கொண்டு போகிறார்கள். ஆனால் எமது சிவ பூமியில் வேட்டி அணியத் தயங்குகிறார்கள்.

தமிழ்ப் பாடசாலைகளில் வெள்ளிக் கிழமைகளிலாவது மாணவர் வேட்டியுடனும் சிவசின்னங்களுடனும் செல்லவேண்டும். எமது சமயத்தை நாம் மதிக்காமல் விடும் வரை வேறு யாரும் மதிக்கப்போவதில்லை.

எம்மதமும் சம்மதம் என்று கூறும் நாம் எமது மதத்தின் மகிமையையே அறியாமலுள்ளோம் என்றார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட அறநெறி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை சுவாமி அன்பளிப்பாக வழங்கினார்.

விழாவில் உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா,வங்கி அதிகாரி கே.மகாலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டனர். (க-2)

## பொதுக் கூட்டம்

(பொன்னாலை)

அளவெட்டி வடக்கு- தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலயத் தொண்டர் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-7,49)

# இன்று ஒரு தகவல்

## மரபு நிலையா? சூழ்நிலையா?

ஒரு மனிதன் நல்லவனாக இருப்பதற்கும் கெட்டவனாக இருப்பதற்கும் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? பரம்பரை குணம் தான் இதற்குக் காரணம் என்று சொல்வதா? இல்லை வளர்ந்த சூழ்நிலைதான் அதற்குக்காரணம் என்று சொல்வதா? இது தான் இன்றைக்கு தகவல்

சில சிறுவர்களைப் பார்த்தால் உடனே "ஏனப்பா நீ இன்னாருடைய மகனா?" என்று கேட்கிறோம். அவனும் "ஆமாம்" என்கிறான். இது எப்படி? முகச்சாயல் அதைக் காட்டிக் கொடுக்கிறது. ஒரு சிறுவன் நடந்து போகும் முறை அவனது உடல் வாகுபோன்றவற்றை வைத்துக்கூட அவன் இன்னாருடைய மகன்தான் என்பதை ஓரளவுக்கு யூகிக்க முடிகிறது.

ஒருவரது முக அமைப்பு கண்களின் நிறம், தோலின்நிறம், தலை முடி, உயரம் எனப் பல விடயங்களைத் தீமானிப்பது அவனது பெற்றோரிடமிருந்து பெறப்படும் மரபுக்கூறுகள் தான். இதைத்தான் ஆங்கிலத்தில் ஜீன்கள் என்று கூறுகின்றனர். உயிரியல் செல்கள், அமினோ அமிலங்கள், சுரப்பிகள் இவற்றின் செயற்பாடுகளை நிர்ணயம் செய்வதும் இந்த மரபுக்கூறுகள் தான் இப்படியெல்லாம் இருப்பதனால் ஒருவரது நடத்தைக்கும் பரம்பரைதான் காரணம் என்று கூறிவிட முடியாது.

சூழ்நிலையின் முக்கியத்துவம் பற்றியும் பலர் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கின்றனர் என்றால் ஒருவரது புத்திசாலித்தனம் உணர்ச்சிவசப்படும் தன்மை கோபம், சுலபமாக நண்பர்களைப் பெறக்கூடிய ஆற்றல், சோர்வுத்தன்மை இதெல்லாம் பெற்றோர்களின் வசதி சூழ்நிலை வளப்பு முறை இவற்றைப் பொறுத்து அமைகிறது என்கின்றனர்.

அப்பாவைப் போல் பிள்ளை நடந்து கொள்கிறான் என்றால் அதற்கு பரம்பரை குணம் காரணமில்லை. பார்த்துக் கற்றுக் கொள்வது தான் காரணம் என்பது இவர்களுடைய வாதம் கோட்டஸ்மன் என்று ஒரு ஆராய்ச்சியாளர் என்ன செய்தார் தெரியுமா? ஒரு தாயின் வயிற்றில் பிறந்த இரட்டைப் பிள்ளைகளைப் பிரித்து வெவ்வேறு சூழ்நிலையில் வளர்த்தார். அப்படி வளர்த்ததன் மூலமாகவே இரண்டு பேருக்கும் மாறுப்பட்ட குணம், திறமை இருப்பது போல் உருவாக்கிவிட்டாராம் அவன் ஒரு மாதிரியும் இவன் ஒரு மாதிரியும் ஆகிவிட்டார்கள்.

வான்டன்பெர்க் என்ற ஒரு ஆராய்ச்சியாளர் என்ன செய்தார் என்றால் குழந்தைகளை மூன்று வகையாகப் பிரித்தார். கலகலப்பாக இருப்பவர்கள் ஒருவகை. தனிமையாக இருப்பவர்கள் ஒருவகை. உணர்ச்சி வசப்படுபவர்கள் ஒருவகை. பாரம்பரியச் செல்வாக்கு தான் இந்த வகைகளுக்குள் காரணம் என்று அடித்துக்கூறுகிறார் அவர்.

1963 இல் 31000 குழந்தைகளைப் பரிசோதனை செய்து பார்த்துவிட்டு ஒரு முடிவைச் சொல்லியிருக்கின்றனர். அது என்னவென்றால் ஒரு குழந்தையின் நடத்தையில் (**Behaviour**) பாரம்பரியத்தின் பங்கு கொஞ்சம்தான் என்கின்றனர். ஆகக்கூடிய சூழ்நிலையின் பங்கு அதிகம் என்பது தெளிவாகிறது.

ஒரு மனிதக் குரங்கை ஒரு குழந்தையுடன் சேர்த்து வளர்த்துப் பார்த்தார்களாம். அந்தக் குரங்கு மிகவும் நேசமாகவும் பாசமாகவும் இருக்கக் கற்றுக்கொண்டதாம். குணத்தை மட்டும் தான் என்றில்லை. உடலின் வாகையைக் கூட சூழ்நிலை மாற்றிவிடும் போலிருக்கிறது. ஜப்பான்காரர்கள் உயரம் குறைவாக உள்ளவர்கள். அவர்களில் சிலர் அமெரிக்காவுக்குப் போய் அங்கேயே இருந்தார்களாம். இரண்டு மூன்று தலைமுறைக்குப் பின்பு பார்த்தால் அந்த ஜப்பான்காரர்கள் மூன்று அங்குலம் உயரமாக வளர்ந்திருந்தார்களாம்.

இதையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது நமது பரம்பரையைவிட நமது சூழ்நிலைதான் மிகவும் முக்கியம் என்று தோன்றுகிறது.

இந்தக் காலத்துச் சிறுவன் தனது அப்பாவிடம் போய் அப்பா... என்னைப் பொறுத்தவரையில் பரம்பரையிலும் நம்பிக்கை இல்லை. சூழ்நிலையிலும் நம்பிக்கை இல்லை என்றான். "எப்படி?" என்று கேட்டார் அப்பா. "ஒரு பையன் கணக்கில் நூற்றுக்கு நூறு மார்க் வாங்கியிக்கிறான். அவனது அப்பா படிக்கும் போது 6 மார்க்தான் வாங்கினராம். அந்த அப்பா மாதிரியே இந்தப் பையனும் இருந்தால் பாஸாகியிருக்கவே முடியாதே என்றான். "அது சரி... ஆறுமார்க் வாங்கிய அந்த அப்பா யார்?" என்றார். "நீங்கள் தான்" என்றான் மகன். "எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார் அப்பா. "அம்மா சொன்னார்" என்றான் மகன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் அரசு முன்வைக்கவுள்ள யோசனைகளை வெளியிடுமாறு ஐ.தே.கட்சி கோரிக்கை

(கொழும்பு)

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இலங்கை சார்பாக முன்வைக்கப்படவுள்ள யோசனைகளை வெளியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஊடகமொன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறிப்பிட்ட யோசனைகள் இலங்கைக்கு மிக முக்கியமானவை என சுட்டிக்காட்டியதுடன், டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சி ஒரு யோசனையை முன்வைத்ததாகத் தெரிவித்தார்.

எதிர்வரும் 16, 17ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெறவுள்ள மாநாட்டினை முழுவலுவுடன் பயன்படுத்திக் கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எனவே அரசாங்கம் அதனை உணர்ந்து மாநாட்டிற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய பொதுக் கட்டமைப்பினை உருவாக்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். (ந-4)

## தனியார் பஸ் சாரதிகளுக்கு சீருடை வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

முறையான தனியார் பஸ் போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கு விசேட செயற்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு நீதி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தற்போதைய மோட்டார் வாகன கட்டணச் சட்டத்தின் விதி முறைகளை மாற்றிமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த புதிய திட்டத்தின் ஒரு அங்கமாக தனியார் பஸ் சாரதிகளுக்கு சீருடை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் பஸ் நடத்துனர்களுக்கும் அனுமதிப்பத்திரம் பெறுவது கட்டாயமாக்கப்படும்.

இவைதவிர சாரதி அனுமதிப் பத்திரத்தினை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கும் புதிய நிபந்தனையொன்றையும் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளதாக நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

வாகன விபத்துக்களை குறைப்பதற்காக அவற்றின் பயண வேகத்தைக் கட்டுப்படுத்துவது குறித்தும் நீதியமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது.

நீதி அமைச்சின் விசேட குழுவொன்றினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள இந்த யோசனைகளை துரிதமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமன்றி வாகனங்கள் அதிக இரைச்சலுடன் ஒலியெழுப்பிகளை அதிகளவில் பயன்படுத்துவதைத் தடைசெய்யவும், குற்றமளிக்கும் சகல சாரதிகளுக்கும் தண்டனை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும் சகல பிரதி பொலிஸ் மா அதிபர் பிரிவுகளிலும் மோட்டார் வாகன கட்டளைச் சட்ட மூலத்தை மீறும் சகல வாகன சாரதிகளுக்கும் எதிரான வழக்குகளை விசாரணை செய்ய தனியான நீதிமன்றமொன்றும் அமைக்கப்படவுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல உயிர்களை பலி கொண்ட வீதி விபத்துக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையிலேயே இந்தத் தீமானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரத்தின தெரிவித்துள்ளார். (க-9)

## மாணவிகளின் கைவிரல்கள் துண்டிப்பு

(மட்டக்களப்பு)

சந்திவெளியில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த இரு மாணவிகளின் கைவிரல்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

அவர்கள் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த மாணவிகளும் பொதுமக்களும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையிலும் தற்போதும் சிகிச்சை பெற்று வருவதாக மட்டு.போதனா வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம்.தேவராஜன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையில் ஐந்துபேர் சிகிச்சைபெற்று வருகின்றார்கள். இந்த ஐந்து பேரும் பாடசாலை மாணவிகளாவர். இதில் இரு மாணவிகளின் கைவிரல்களே துண்டிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறே வாழைச்சேனை வைத்தியசாலையில் பத்துப்பேர் சிகிச்சைப் பெற்று வருகின்றார்கள்.இவர்களுக்கான சிகிச்சை கிரமமாக வழங்கப்பட்டு வருவதாக வைத்திய் அதிகாரி எஸ். தட்சணாமூர்த்தி தெரிவித்தார். (ந-4)

## ஜும்மா பள்ளிவாசலின் பின்புறமாக வடிசாராயம் காய்ச்சிய கும்பல்!

### உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள ஜும்மா பள்ளிவாசலின் பின்புறமாக வடிசாராயம் காய்ச்சிய குழுவினை அப் பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டவர்கள் பிடிக்க முற்பட்ட வேளை அவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

மேற்படி பள்ளியில் அதிகாலை தொழுகை நேரம் பள்ளியின் பின்புறமாக இருந்து வந்த துர்நாற்றம் தொழுபவர்களுக்கு இடைஞ்சலாகவிருந்ததை அடுத்து தொழுகையில் ஈடுபட்டவர்கள் சென்று பார்த்தபோது வடிசாராயம் காய்ச்சிக் கொண்டிருந்தமை தெரியவந்தது.

எனினும் சம்பந்தப்பட்டவர்களை பிடிக்க முற்பட்டபோது அவர்கள் ஓடிவிட்டனர்.

எனினும் அவ்விடத்தில் வடிசாராயம் காய்ச்சும் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.இது சம்பந்தமாக பள்ளிவாசலைச் சேர்ந்தோர் பொலிஸாருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் முறைப்பாடு ஒன்றினைச் செய்துள்ளனர். (ந-4)

## சுற்றுலாத்துறையை மறுசீரமைக்க அமெ.3மில்லியன் டொலர் நிதியுதவி

(கொழும்பு)

ஆழிப்பேரலையால் சீர்குலைந்து போயுள்ள சுற்றுலாக் துறையைச் சீரமைக்கப் பெருமளவிலான நிதி உதவியை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா வாரியத் தலைவர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சர்வதேச வளர்ச்சி நிறுவனம் இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் சுற்றுலாச் சீரமைப்பிற்காக 4.3 மில்லியன் டொலரை ஒதுக்கியுள்ளதாகவும் இதில் இலங்கைக்கு 3மில்லியன் டொலர் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது குறித்து உதய நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

ஆழிப்பேரலைக்குப் பிறகு சுற்றுலாப் பயணிகளை நம்பியிருந்த தங்குமிடங்களின் அறைகள் அனைத்தும் வெற்றிடங்களாகவே இருக்கின்றன. இவற்றை நிரப்புவதே எமது முக்கிய நோக்கம்.

ஐரோப்பா மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகள் பெரும் எண்ணிக்கையில் மீளவும் இலங்கைக்கு வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை மட்டுமே நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் இங்கே நிறைய செலவிடுதலையும் நாம் விரும்புகிறோம். இந்திய ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்ப்பதற்காக அமெரிக்காவின் பெருந்தொகை நிதி செலவிடப்படும் என்றார். (ந-4)

## காணிகளுக்கு அனுமதிப் பத்திரம்

(மன்னார்)

கடந்த காலங்களில் மன்னார் மாவட்டத்தில் அத்துமீறிக் குடியேறியிருந்து இதுவரை காலமும் உறுதி வழங்கப்படாத காணிகளுக்கான விசாரணைகள் அண்மையில் மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்றன.

இதற்கு வடக்கு- கிழக்கு மாகாண காணி ஆணையாளர் கே. பரமலிங்கம், உதவி ஆணையாளர் தங்கன் மற்றும் மன்னார் காணி அபிவிருத்திச் சங்க அதிகாரிகள் காணிகளுக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதற்காக மன்னார் பள்ளிமுனை மேற்கு, பள்ளிமுனை கிழக்கு சந்திபுரம் எமில்நகர் போன்ற இடங்களில் அத்துமீறி வாழும் மக்களை அழைத்து ஆரம்ப விசாரணைகள் நடத்தி இவர்களுக்கான காணிகளுக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந)

# காஞ்சிபுரம், கும்முடிப்பூண்டி சட்டமன்ற இடைத்தேர்தல்

**ஓர் அலசல்**

நேற்றைய தினம் தமிழக சட்டமன்றத்தின் இடைத்தேர்தலுக் காக வாக்குப்பதிவு நடைபெற்ற காஞ்சிபுரம், கும்முடிப்பூண்டி ஆகிய இரு தொகுதிகளிலும் கடந்த இரு பது நாட்களாக நடந்துவந்த அனல் பறக்கும் பிரசாரங்கள் எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டன.

இத்தொகுதிகளில் கள்ளவாக்களித் தால், வன்செயல்களில் ஈடுபட்டால, அத்கையவர்கள கண்ட இடத்தில சுடப்பட்டுவார்கள் என்றும், தேர்தல் விதிகளை மீறிப் பிரசாரத்தில் ஈடு பட்டவர்களுக்கு இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படு மென்றும் காஞ்சி தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா ஏற்கெனவே அறி வித்துள்ளார்.

தேர்தல் நடைபெறும் தினத்



துக்கு முதல்நாள் மாலை 5 மணிக் குப் பின் இத்தொகுதியுடன் சம்பந்த மில்லாதவர்கள இங்கு தங்கியிருக் கக்கூடாது என்று தேர்தல் ஆணை யம கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தும் அ.தி.மு.க. அமைச்சர்களும, பிர முகர்களும் தேர்தல் ஆணையகத் துக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு மாறுவேடத்தில் இவ்விரு தொகுதி களிலும் பதுங்கியிருப்பதாக அங் கிருந்து வரும் செய்திகள் தெரிவிக் கின்றன. இயல்பாக வேட்டி சட்டை யுடன் வலம்வரும் நிதி அமைச்சர் பொன்னையன் சபாரி சூட்டுடன் திரிவதாகவும், அமைச்சர் இன்பத் தமிழன் சாரம் சட்டையுடன் பதுங்கி யிருப்பதாகவும், இவ்விதமாக பெருந் தொகை அ.தி.மு.கவினா இத்தொகுதி யில் பதுங்கியுள்ளதாகவும் தேர்தல் ஆணையத்துக்குப் புகார் செயயப் பட்டிருக்கிறது.

காஞ்சி, கும்முடிப்பூண்டித் தொகுதி களில் அ.தி.மு.கவினரால் கரன்ஸி நோட்டுக்கள் வாரியிறைக்கப்படுவ தாகவும், வீடு வீடாகச் சென்று வாக் காளர்களுக்குப் பணம் கொடுக்கப் பட்டதாகவும் தெரிவித்துப் பெருந் தொகையாக வாக்காளர்கள் தமக்கு கொடுக்கப்பட்ட பணத்தை தேர்தல் அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளதா கவும் அங்கிருந்து வரும் செய்திகள தெரிவிக்கின்றன.

அடுத்த ஆண்டு நடைபெற வுள்ள தமிழ் நாடு சட்டமன்றத் தேர் தலை நாடிபிடித்துப் பார்க்கும் இடைத் தேர்தல்களான இதில், எப்படியும், என்னவிலை கொடுத்தாவது வெற்றி பெற்றுவிடவேண்டுமென்று அ.தி.மு.க உயிரைக்கொடுத்துப் பாடுபட்டு வரு கிறது.

கடந்த் நாடாளுமன்றத் தேர்த லில் பா.ஜ.க.வுடன் கூட்டு அமைத்து 40 தொகுதிகளிலும் போட்டியிட்டு 40 தொகுதிகளிலும் படுதோல்விய டைந்த அ.தி.மு.க இத்தேர்தலில் பா.ஜ.காவை கைவிட்டு விட்டுத் தனித்துப் போட்டியிடுகிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல நடைபெற்ற நேரத்தில் பா.ஜ.க. அர சில், அமைசசராக இருந்த திருநா வுக்கரசரின் செல்வாக்கு உட்பட்ட தொகுதி புதுக்கோட்டை. இத்தொகு தியில் அவரது பெயரைச் சொல்லி ஒரு துரும்பை நிறுத்தினாலும் வெற்றி பெற்றுவிடும் என்று சொல்வார்கள். ஆனால் ஜெயலலிதா பா.ஜ.கவுக்கு விதித்த முக்கிய நிபந்தனை திருநா வுக்கரசர் புதுக்கோட்டை தொகுதி யில் மாத்திரமல்ல, தமிழ்நாட்டில் வேறெந்தத் தொகுதியிலும் போட்டி யிடக் கூடாது என்பதுதான்.

வேறு வழியில்லாமல் ஜெய லலிதா விதித்த நிபந்தனைகளுககு உட்பட்டு தேர்தலில் இணைந்து போட்டியிட்டு மூக்குடைபட்ட பா.ஜ.க ஜெயலலிதா கூட்டைவிட்டு மெல்லக் கழன்றுவிட்டது.

வன்முறை, அராஜகம், வாக்குக சாவடிகளைக் கைப்பற்றுதல், இரவோடு இரவாக கள்ள வாக்குப் போடுகிற வர்களைத் தொகுதிகளில் கொண்டு வந்து நிறைத்து கள்ளவோட்டுப் போடச் செய்தல் போன்ற தந்திர ரோபாய நடவடிக்கைகள் மூலம் எப்படியும் வெற்றி பெற்றுவிடலாம் என மனப்பால் குடித்த அ.தி.மு.கவினரை தேர்தல் ஆணையத்தின் கடும் நடவ டிக்கைகள் அதிர்ச்சியடையச் செய்து விட்டது.

தமிழக அரசின் நடவடிக்கை களில் நம்பிக்கை இழந்த தேர்தல் ஆணையம், தேர்தல் நடப்பதற்கு இரு தினங்களுக்கு முன்னரே இவ் விரு தொகுதிகளிலுமுள்ள திருமண மண்டபங்கள் போன்ற அனைத்துப் பொதுமண்டபங்களையும் கைபற்றி வட்டது. தமிழக அரசு ஊழியர்கள் அதி.மு.கவின் கைப்பாவையாகி விடலாம் என்ற சந்தேகத்தில் மத திய அரசு ஊழியர்களையே தேர் தல் பணியாளர்களாக தேர்தல்



ஆணையம் நியமித்துள்ளது. அத் துடன் மத்திய ரிசேவ் பொலிஸ், மத்திய இராணுவம் ஆகியவற் றையும் சேவைக்கழைத்துள்ளது. அத்துடன் கள்ளவோட்டுப் போட்டுப வர்கள், வன்செயலில் ஈடுபடுபவர் களைக் கண்ட இடத்தில் சுடும்படி இட்ட உத்தரவும் அ.தி.மு.கவை ஆட் டமகாண வைத்திருக்கிறது.

தி.மு.க கடந்த நாடாளுமன் றத் தேர்தலின்போது கூட்டுச் சேர்ந்த அத்தனை கட்சிகளுடனும் சேர்ந்து இவ்விரு தேர்தல்கள்ளயும் எதிர் கொள்கிறது.

**பொ.இராசதுரை**

அளவுக்கு மிஞ்சி சொத்துச் சேர்த்த வழக்கு, இங்கிலாந்தில் ஹோட்டல்கள் வாங்கிய வழக்கு, வெளிநாட்டிலிருந்து 3 இலட்சம் அமெரிக்க டொலர்களை அன்பளிப் பாகப் பெற்ற வழக்கு போன்றவற் றின் கிடிக்கிப் பிடியில் சிக்கியுள்ள ஜெயலலிதாவுக்கு சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றியும் முதல மைச்சர் பதவியும் அவசியம் தேவை.

காஞ்சி, கும்முடிப்பூண்டி வாக காளப் பெருமக்கள் என்ன நினைக கிறார்கள் என்பது நாளை தெரிந்து விடும். □

## மாவின் விலை குறைப்பு

கோதுமை மாவின் விலை ஒரு ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. இவ் விலைக்குறைப்பு நேற்று முன் தினத்திலிருந்து அமுலுக்கு வந்துள ளதாக வர்த்தக நுகர்வோர் விவ கார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ் விலைக்குறைப்பின் பிர காரம் கூட்டுறவு 'மற்றும் அங்கீக ரிக்கப்பட்ட முகவர் நிலையங்க ளுக்கு, ஒரு கிலோ கோதுமை மா 22 ரூபா 50 சதத்துக்கும், பேக்கறி உரிமையாளர்களுக்கு 22 ரூபாவுக் கும் வழங்கப்படவுள்ளது. அதே வேளை கொழும்புக்கு வெளியே யுள்ள பேக்கறிகளுக்கு ஒரு கிலோ மா 23ரூபா 50 சதத்திற்கு வழங் கப்படவுள்ளதாக அமைச்சு அறி வித்துள்ளது. (ச-8)

## பிக்குகள் ஆர்ப்பாட்டம்

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப் புத் தெரிவித்து அனைத்து பல்கலைக் கழக பிக்குமார் சங்கத்தினர் நேற்று முன்தினம் அமைதி ஆர்ப்பாட்ட மொன்றில் ஈடுபட்டனர்.

கொழும்பு புறக்கோட்டையில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங் களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிக்குகள் கலந்துகொண்டனர்.

பொதுக்கட்டமைப்பின் மூலம் நாட்டின் ஸ்திரமின்மை ஏற்படலாம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிககு மார் தெரிவித்தனர். பொதுக்கட்ட மைப்பை நிறுவுவதை நிறுத்தவேண் டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-8)

## சவுதி அரேபியாவில் இருந்து 60 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

தொழில் வாய்ப்புத்தேடி சவுதி அரேபியாவுககுச் சென்று பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்த இலங்கையர்கள் பலர் நாடு திரும் பியுள்ளனர்.

17 பெண்கள் உட்பட 60 பேர் கடந்த வியாழக்கிழமை இலங்கையை வந்தடைந்தனர்.

சவுதி அரேபியாவில் பலவேறு நெருக்கடிகளை எதிர்நோக்கிய இவர் கள் அங்குள்ள அகதி முகாம்க ளில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர் என்றும்,

இவர்கள் திருகோணமலை, முல்லைத்தீவு, அனுராதபுரம், வவுனியா ஆகிய கஷ்ட பிரதேசங்களைச் சேர்ந் தவர்கள் எனவும் கூறப்படுகின்றது.

வறுமை காரணமாக ஐரோப்பிய நாடுகளுக்கு தொழில்வாய்ப்புத் தேடிச் செல்லும் பெண்களை அங்குள்ள தொழில் முகவர்களும் வீட்டு எஜ மான்களும் பாலியல்ரீதியாக சித் திரவதை செய்வதுடன் அவர்களுக்கு உரியமுறையில் உணவு, சம்பளம் என்பவற்றைக் கொடுக்க மறுப்ப தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

## இலவச மாதிரி வினாக்களும் விளக்கங்களும்

இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாண வர்களுக்கு, இலவச மாதிரி வினாக்களும, விளக்கங்களும், பல்கலைக் கழகத்திற்கு முன்பாகவுள்ள சத்தய சாயி சேவா நிலையத்தில் அனுபவ மிக்க ஆசிரியர்களால் வழங்கப்படவுள்ளன.

பொருளியல், கணக்கியல், வர்த்தகம், ஆங்கிலம் ஆகிய பாடங் களுக்கு முறையே 14,15,16,17ஆம் திகதிகளில் காலை 9.00மணி தொடக்கம் நண்பகல் வரை இவை நடைபெறும். (ற)

## குமுதினிப் படகுப் படுகொலை 20ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று

### உறுதிப் போர்

குருதி தோய்ந்த குமுதினியாள்
குமுறும் கடலில் தனியாக
வருவாள் என்று அன்றொருவர் சொன்னார்
வந்தாள் எங்கள் உணர்வீர்க்க!

பேரினவாதப் பேரிடியாய்
பேசும் கொலைஞர் பேய்நிசமாய்
ஆரிவர் கொடியோர் ஆள்பவரா?
அரசா? மக்கள் காவலரா?

எத்தனை பெண்கள் சிறுபிள்ளை
எளியோர் மக்கள் வயோதிபர்கள்
அத்தனை பேரும் பலியானார்.
அரக்கர் செயலால் பிணமானார்...!

புத்தர் தந்த தத்துவங்கள்
புரட்டும் திருட்டும் ஆய்விடுமோ?
பித்தர் செய்த பேய்ச்செயலால்
பெருகிற் றுறுதிப் போராட்டம்!

நெடுந்தீவு மகேஷ்.

### கடலம்மா சொல்லம்மா!

கடலம்மா நீயே சொல்!
குமுதினி ஏன் பிந்தி வந்தாள்?
எம்மவரின் அவலங்களைச்
சடலங்களாய்ச் சுமந்துகொண்டு
குமுதினி குருதி வடிய ஏன் வந்தாள்?
கடலம்மா கண்டாயோ
கார்த்திகேசு என்னவானான்
எந்தக் கடலில் உடலூதிக் கிடந்தானோ
ஓ... சோழகக்காற்றே நீ
வளம்மாறி வீசியிருந்தால் குமுதினி வரமாட்டாள
என்று நெடுந்தீவுக்குச் சொல்லியிருப்பாய்
பாவம் மரணங்களின் செய்தி கூடக்
கிட்டாத தொலைவில்
ஏக்கங்களையும் துக்கங்களையும்
கடலலைகளிடம் சொல்லிவிட்டுக்
காத்திருக்கும் மக்கள்
கடலம்மா நீ மலடி
ஏனந்தத் தீவுகளை
அநாதரவாய் தனியே விட்டாய்
கடலம்மா......
உன் நீள் பரப்பில்
அனாதரவாய் மரணித்த எம்மவரை
புதிய கல்லறைகளை எழுப்பி
'அனாதைக் கல்லறைகள்'
என நினைவூட்டு, ஆனால்
இனிவரும் கல்லறைகள்
வெறும் இறப்புக்களின் நினைவல்ல - எமது
இலட்சியங்களின் நினைவாகட்டும்!

நிலாந்தன்.

### குமுதினியின் கதை

அலையில் குதிக்கும் முகில்களே - குமுதினி
அழுத கதையை எழுதுங்களே!
மழையில் படிக்கும் முகில்களே - குமுதினி
மனதில் துயரை எழுதுங்களே!

கடலில் கரைந்த ஓவியமே - குமுதினி
காவிய மனிதரை வரையுங்களே!
படகில் அழிந்த நிலவுகளே - குமுதினி
படைத்த பயணம் தொடருங்களே!

இழந்த நாட்களில் எழுகின்றோம் - குமுதினி
எழுதிய நாதங்களில் எழுகின்றோம்
தொழுத வாழ்வை அழிக்கின்றோம் - குமுதினி
தொடர்ந்தும் பாய விழிக்கின்றோம்!

தமிழீழக் கூத்தன்.



# '6.2' திரை விமர்சனம்

'கால் சென்டரில்' வேலை பார்க்கும் நண்பர்கள் ஜேம்ஸ் - மிஸ்டர் ஒயட்.

அப்பாவி ஜேம்ஸ் ரயிலில் போகும்போது ஒரு கொலை நடக்கிறது. அதற்கு நேரடி சாட்சியான அவரிடம் பொலிஸ விசாரிக்கிறது. அப்போது கொலை செய்யப்பட்டவர் வாழ்ந்த பங்களாவில் பல மர்மங்கள் புதைந்துகிடப்பது தெரிகிறது.

இதைத் துப்பறிவதறகாக பொலிஸார் ஜேம்ஸ் - ஐஸ்வர்யா ஜோடியைக் கணவன் - மனைவி போல எதிர்வீட்டில தங்கவைக்கிறார்கள். பங்களாவில் இருப்பவர்களுடன் இருவரும் பழகி பல உண்மைகளைக் கண்டுபிடிக்கும்போதே... அங்கு இன்னொரு கொலை. திடீரென்று வில்லன் வெளிநாட்டில் இருந்து திரும்ப... கதை சூடுபிடிக்கிறது.

பரபரப்பான சம்பவங்களுடன் நகைச்சுவையையும் கலந்து 'அக்ஷன்' படமாகத் தந்திருப்பது '6.2'.

ஜேம்ஸ் ஆக சத்யராஜ், மிஸ்டர் ஒயட் ஆக வடிவேலு. ஆரம்பத்தில் இரண்டு பேரும் செய்யும் கலாட்டா... கலகல...

சத்யராஜ் ஜோடியாக வரும் சுனிதா வர்மா சகல அம்சங்களுடன் வந்து, நடிப்பிலும் வெளுத்துக்கட்டுகிறார். இரண்டு பேரும் சவால்விட்டுத் துப்பறியும் காட்சிகள் சுவையானவை. அப்பாவி சத்யராஜ்... 'அவதாரம்' எடுக்கும் சத்யராஜ் இடையே உள்ள முரண்பாடு கதைக்கு விறுவிறுப்பு ஏற்றுகிறது. சண்டைக் காட்சிகள் 'திரில்' ஆன சவால்கள்.

வில்லனாக ரவீந்தரும், வின்செண்ட் அசோகனும் மிரட்டி இருக்கிறார்கள். நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் வில்லத்தனத்தில் கால்வைத்திருக்கும் ரவீந்தர் அடுத்த 'ரவுண்டை' தொடர கிடைத்த வாய்ப்பை 'சிக்' ன்னறு பிடித்திருக்கிறார். பொலிஸ் அதிகாரியாக வரும் ராஜ்கபூர் கச்சிதம்.

வம்பில் மாட்டிக்கொள்ளும் வடிவேலுவின் 'சில்மிஷங்கள்' சிரிக்காதவர்களின் வயிற்றையும் புண்ணாக்கும். அஜய் ரத்தினம், மனோபாலா, பழனிவேல், கீர்த்தனா, மேகா கான், ரிச்சா, ஜெய கோவிந்தன் ஆகியோரும் குறைவைக்கவில்லை.

பின்னணி இசையில் பிரமிக்க வைத்திருக்கிறார் இமான். 4 பாடல்களுள் துள்ளல்.

தொடக்கம் கலகலப்பு... பின்னர் 'பரபரப்பு' என்று திரைக்கதை அமைத்து 'க(வ)னமாக' இயக்கி இருப்பவர் வி.செந்தில்குமார்.

நவீன மாற்றங்களைக் கதைக்கு சாதகமாக்கி, பழைய 'பார்முலா'வுக்கு பதிய வடிவம் கொடுத்திருக்கிறார்.

'6.2' - அசக்கலான உயரம்.

# காதல் ரசம் சொட்டும் படம் 'காதல் வசந்தம்'

'கலாட்டா கணபதி', 'திரு திரு' ஆகிய படங்களைத் தயாரித்த மாருதி பிலிம்ஸ் ஆர்.ராதாகிருஷ்ணன், காதல் ரசம் சொட்டும் படமொன்றைத் தயாரிக்கிறார். அதற்கு 'காதல் வசந்தம்' என்று தூயதமிழில் பெயரிட்டு இருக்கிறார்.

கடலூர் கல்லூரியில் நடைபெற்ற ஒரு உண்மைச் சம்பவத்தை மையமாகக் கொண்டு உருவாகும் இந்தப் படத்தில் குணால் நாயகனாக நடிக்க, அவரது ஜோடியாகப் பிரபல நடிகை நடிக்கிறார்.

இவர்களுடன் 'காதல்' சுகுமார், மும்தாஜ், ராஜீவ், சபீதா ஆனந்த், பாண்டு, சேதுவிநாயகம், டி.எம்.மயில்வாகனன் உட்பட பலர் நடிக்கின்றனர்.

எஸ்.பால்ராஜ் ஒளிப்பதிவு செய்ய, திரைப்படக் கல்லூரி மாணவர் பி.ஜி.ராஜ்மோகன் திரைக்கதை எழுதி இயக்குகிறார். ராஜேஷ்கண்ணா கதை, வசனம் எழுதுகிறார். இது ஒரு குறுகியகால தயாரிப்பு.



'சின்னா'
சினேகா - அர்ஜூன்

# ரஜினியின் அடுத்தபடம்...? வெளிவராத பரபரப்பு தகவல்கள்!

மறுபடியும் ரஜினியே வந்து முறியடித்தால்தான் உண்டு. அதுவரைக்கும் இந்த ரெக்கார்டை முறியடிக்க யாராலும் முடியாது என்கிறார்கள் சந்திரமுகியின் வெற்றி குறித்து. படையப்பா வசூலையும் மிஞ்சிவிட்டது 'சந்திரமுகி' வசூல்! ரிஷிகேஷில் இருந்த ரஜினிக்கு படத்தின் கலெக்ஷன் குறித்த தகவல்கள் சுடச் சுடப் போய்விடும். திட்டமிட்டபடி இம்மாதம் சென்னை திரும்பினார் ரஜினி. வந்ததும் அவர் சந்திக்கிற தயாரிப்பாளர்கள் பட்டியலில் ஐந்து பேர் இருக்கிறார்களாம். முதலில் இருப்பவர் எடிட்டர் மோகன்.

'சந்திரமுகி' படம் தயாரிப்பில் இருக்கும் போதே 25 லட்சத்தை ரஜினிக்கு அட்வான்சாக கொடுத்திருக்கறார் மோகன். அதை வாங்கிக்கொண்ட ரஜினி, நான் எப்பொது வேண்டுமானாலும் உங்களுக்கப் படம் பண்ணுவேன். என்னை அவசரப்படுத்தக்கூடாது என்றாராம். அதைக் கட்டளையாக ஏற்றுக்கொண்டாராம் மோகன். ரஜினி அழைக்கிற எந்தநேரத்திலும் தயாராக இருக்க வேண்டுமென்பதற்காக



சமீபத்தில் வந்த இந்திப் படம் ஒன்றின் ரைட்சை வாங்கி வைத்திருக்கிறார்ராம் மோகன். அமிதாப் இந்தியில் பல கோடிகளை அள்ளிய 'வக்த்' என்ற படத்தின் உரிமையைத் தான் வாங்கி வைத்திருக்கிறாராம். அமிதாப் நடித்த வேடத்தில் ரஜினியும், அக்ஷய்குமார் நடித்த வேடத்தில் ஜெயம் ரவியும் நடிப்பார்களாம். இயக்குவது? வேறு யார், ஜெயம் படத்தை இயக்கிய ராஜாவேதான்!

அடுத்து ரஜினியின் பார்வையில் இருப்பது சத்யஜோதி தியாகராஜன். அதன்பின் பர்ணசந்திரராவ். பிறகு அருணாச்சலம், இதில் யாருக்கு அதிர்ஷ்டம் அடிக்கப்போகிறதோ தெரியவில்லை. 'சந்திரமுகி' வெற்றிக்குக் காரணமான பி.வாசுவுக்கே அடுத்த படத்தை இயக்கும் வாய்ப்பைக் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறார் ரஜினி என்று கிசுகிசுப்பவர்களும் உண்டு.

இடையில் நோய்வாய்ப்பட்டிருக்கும் பழம்பெரும் இயக்குனர் ஸ்ரீதருக்கு உதவும் விதத்தில் ஒரு படத்தை திட்டமிட்ட ரஜினி இந்தத் தகவலை ஸ்ரீதரிடம் தெரிவித்தாராம். ஆனால் ஸ்ரீதர் தரப்பில் அது மறுக்கப்பட்டுவிட்டதாகவும் தகவல்.

குதிரை மீண்டும் எழுந்துவிட்டது. இனி குளம்படி சத்தம்தான்!



# எஸ்.ஜே.சூர்யா இயக்கும் 'அன்பே ஆருயிரே'

'பி.எஃப்' என்று 'பெஸ்ட் ஃப்ரண்ட்' படத்துக்குப் பெயரிட்டிருந்த எஸ்ஜே.சூர்யா, அரசியல்வாதிகளின் ஆலோசனைப்படி அந்தப் படத்துக்கு தூய தமிழல் 'அன்பே ஆருயிரே' என்ற பொருள் வருமாறு 'அ,ஆ' என்று தலைப்பு வைத்துள்ளார்.

இந்தப்படத்தை இயக்கி நடித்துவரும் அவர், அடுத்து சிலம்பரசன் இரண்டு வேடங்களில் நடிக்கும் 'ஏ/சி' என்ற படத்தை இயக்குகிறார். இதில் அவர் நடிப்பாரா என்பதை முடிவு செய்யவில்லையாம். 'ஏ/சி என்பதற்கு 'ஏழுமலை, சிதம்பரம்' என்பதாக அர்த்தமாம.

நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் நடிக்கவந்தார் கார்த்திக். ஆனால் அந்தப் படங்கள்தான் இன்னும் வெளிவராமல் உள்ளன. 'மனதில்' தயாராகியும் திரைக்கு வரவில்லை. 'துஸ்தி' பாதியிலேயே நிற்கிறது.







# 'விஸ்வ துள... ...

2005 ஆம் ஆண்டுக்கான...
விழா 10 நாட்கள் நடந்தது. உ...
தயாரிக்கப்பட்ட ஏராளமான பட...
கடந்தவாரம் முடிவடைந்...
நந்திதாதாஸ் நடித்த 'விஸ்வ து...
துகள் கிடைத்துள்ளன. இந்தப்...
சுமதிராம். எம்.எஸ்.விஸ்வநாதனு...
இசையமைத்தார்கள். ஒளிப்ப...
இந்தப் பட விழாவில் '...
சிபாரிசு செய்யப்பட்டது. இறுதிய...
இடையே 2 விருதுகளை இந்...
மம்முட்டி, நந்திதாதாஸ் நடி...
வகையில் கலை அம்சத்துடன ...
நாதன், இளையராஜா இசைக்கு...
சிறப்பாக படத்தை இயக்கிய ...
வழங்கப்பட்டது. இதுகுறித்து ப...
கேட்ட போது, "இதன்மூலம் எ...
நனவாகி இருக்கிறது. இசையமை...
கள் எம்.எஸ்.விஸ்வநாதன், ...
ராஜா ஆகியோரின் தனித் தன்...
கிடைத்த பரிசு இது. திரை...
எனக்கு அதிக அனுபவம் இல்...
விருது என்னை ஆச்சரியப்ப... ...
கிறது" என்று பெருமைப...

# வா மருமக...




தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிற விஷயம் ஒன்று. ஆனாலும் கொஞ்சம் பெருமையான சுற்றல்தான இது. அழகுப் பதுமை ஐஸ்வர்யா தமிழ்நாட்டின் மருமகள் ஆகப் போகிறார். இந்தி நடிகர் விவேக் ஓபராய்
சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்...
கடந்த இரண்டு வருடங்களாக ...
டிருக்கிறார். விரைவில் இருவரும் ...
தாகவும் அந்தப் பேட்டியில் செ...
இந்த விவேக் ஓபராய் ...
இவருடைய அம்மாவும் நடிகர் சத்...
ஓபராயின பேட்டி வந்தவுடன், ...
மீடியாக்களிடம், தானும் விவே...
என்ற உண்மையை ஒப்புக்கொ...
உறவுமுறை எப்படி என்று கே...
மாதிரி பதில் வருகிறது சத்யரா...
மொத்தத்தில் இருவரும் ...
வோம். ஆனால் இதையும் மீறி ...
தையே தன் சொந்தமாக்கிக் ...
சுனாமியால் வீடிழந்தவர்களுக்கு...
தன் உறவினர் என்று சொல்...
னுக்கும் பெருமை உண்டு. அ...
மகளே வா' என்று அழைப்பதி...
தமிழனும் அவனது குடும்பமும்...



ரஞ்ஜித் நடித்து முடித்துள்ள 'பதவி படுத்தும் பாடு' படத்துக்குச் சிறப்பாக இசை அமைத்திருக்கும் காந்திதாசன், பின்னணி இசை அமைப்பதற்கு ஆறு நாட்கள் எடுத்துக் கொண்டாராம். காரணம், படத்தில் இடம்பெற்றுள்ள அரசியல் நையாண்டி வசனங்களை ரசித்துச் சிரித்த அவரும், அவரது குழுவைச சேர்ந்தவர்களும் மியூஸிக் நோட்ஸ் எடுப்பதற்குள் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிட்டதுதான் என்கின்றனர். இந்தப் படத்துக்காக பா.விஜய் முதன்முறையாக பக்திப் பாடல் ஒன்றையும் கபிலன் முதன்முறையாக அரசியல் பாடல் ஒன்றையும் எழுதியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

அதிரடி அரசியல் வசனங்கள், காட்சிகளுடன் தயாராகியிருக்கும் விஜயகாந்தின் 'பேரசு' படம், ஜூனில் திரைக்கு வருகிறது.





## சினிமாச் சிதறல்

## ...' படத்துக்கு ...ச விருது

...ஹூஸ்டன் சர்வதேச திரைப்பட ...களவில் பல்வேறு நாடுகளில் ...கள் இதில் திரையிடப்பட்டன. ... இந்த விழாவில், மம்முட்டி ...சி' தமிழ்ப் படத்துக்கு 2 விரு... படத்தை எழுதி இயக்கியவர் ... இ...யராஜாவும் இணைந்து ... கண்ணன்.

...ஸ்வ துளசி' 4 விருதுகளுக்கு ... கடுமையான போட்டிகளுக்கு ... படம் தட்டிச்சென்றது.

...கும, கதைக்கும் மெருகு சேர்க்கும ...சயமைததுள்ள எம்.எஸ்.விஸ்வ...ரெமி த...ங்க விருது கிடைத்தது. ...திராமுக்கு மற்றொரு விருது ...தின் இயகுனர் சுமதிராமிடம் ... கனவு ...பாளர் ...ளைய ...மகக் ...லகில் ...இந ...திருச ...வீ



## பழமை செய்யப்போகிறேன் —பார்த்திபன்



சொந்தப் படமான 'குடைக்குள் மழை' தோல்விக்குப் பின் வெளி தயாரிப்பாளரின் 'கண்ணாடிப் பூக்கள்' படத்தில் நடித்தார் பார்த்திபன. 'பைசா', 'கர்த்தா' ஆகிய படங்களிலும் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இப்போது மீண்டும் சொந்தப் படம் எடுக்கத் தயாராகி விட்டார் பார்த்திபன். இப்படத்துக்காக ஹீரோயினைத் தேடும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார். அவரே கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும் இப்படத்துக்குப் 'பச்சைக் குதிரை' என தலைப்பு வைத்திருக்கிறார். இதுபற்றி அவரிடம் கேட்ட போது,

**படத்துக்கு 'பச்சைக் குதிரை' எனத் தலைப்பு வைத்தது ஏன்?**

கிராமங்களில் 'பச்சைக் குதிரை' விளையாட்டைச் சிறுவர்கள விளையாடுவார்கள். அந்த விளையாட்டு படத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்கும். அதனால்தான் இந்த தலைப்பு வைத்திருக்கிறேன்.


**சரி, இதிலும் ஏதாவது புதுமையைச் செய்வீர்களா?**

இதில் பழமையைச் செய்யலாம் என்று பார்க்கிறேன். அதாவது பழைய பார்த்திபனைத் தேடி எடுக்கப்போகும் படம் இது. 'புதிய பாதை' பாணியில் பக்கா கமர்ஷியல் படமாக இருக்கும். எனவே இது கமர்ஷியல் கவிதை அல்ல வெறும் கமர்ஷியல் படம்தான்.

**'குடைக்குள் மழை' சரியாகப் போகாததற்குக் காரணம்?**


பல காரணங்கள் உண்டு. சொந்தப் படம் சரியாகப் போகாத பட்சத்தில் சில நல்ல வெளிப்படங்களில் நடித்துப் பார்க்கலாம் என்று தோன்றும். அது போலத்தான் கண்ணாடிப் பூக்கள் படத்தில் கதைக்காகவே நடித்தேன். ஆனால் எதிர்பார்த்த ரிசல்ட் கிடைக்கவில்லை என்றார்.

## சிவகாசி செட்



விஜய் நடிக்கும் ஒவ்வொரு படத்திற்கும் சென்னையில் ஒவ்வொரு பகுதியை பிரமாண்ட செட்டாக அமைத்துப் படப்பிடிப்பு நடத்துவது வழக்கமாகிவிட்டது.

அந்தவகையில் செனனையின் மிகப் பிரபலமான கடை வீதியான தியாகராயநகா ரங்கநாதன் தெருவைச் செட்டாக்கயிருக்கிறார்கள. சிவகாசி விஜயாவில் தத்ரூபமாக ரங்கநாதன் தெருவை ஒரு கோடி ரூபா செலவில் செட்டாக அமைதது படப்பிடிப்பு நடத்தி வருகிறார்கள. இந்தப் படத்தில் விஜய் ஜோடியாக அசின் கல்லூரிப் பெண்ணாக வருகிறாராம். 'திருப்பாச்சி'யைப்போல் இதில் வில்லன்கள் கலக்கலும உண்டாம்.



'அமுதே'
ஜெய்ஆகாஷ் - மதுமிதா

## ...ளே வா...



... தனக்கும் ஐஸ்வர்யாவுக்கும் ...நந்த காதலை ஒப்புக்கொண ...மணம் செய்துகொள்ளப போவ...லியிருக்கிறார்.

...நாட்டுக்காரர் என்கிறார்கள். ...ஜும் உறவினர்களாம். விவேக் ...த்யராஜைத் துளைத்தெடுத்த ...ஓபராயும் உறவினர்கள்தான் ...ருக்கிறார் சத்யராஜ். இந்த ...ல், மயக்கம் போட்டு விழுகிற ...ருந்து.

...வு என்றே வைத்துக்கொள் ... மனிதாபிமானத்தால் தமிழகத் ...ண்டுள்ளார் விவேக் ஓபராய். ...றுதலாக இருந்த ஓபராயை ...கொள்வதில் ஒவ்வொரு தமிழ ...ல் ஐஸ்வர்யாவை 'வா மரு...மாயாரப் பெருமைப்படுகிறான்



'கள்வனின் காதலி'
எஸ்.ஜே.சூர்யா - நயன்தாரா

## சூர்யா, திரிஷா நடிக்கும் 'ஆறு'

ஜெமினி புரொடக்ஷன்ஸ், 'ஐயா' உட்பட பல வெற்றிப் படங்களை இயக்கிய ஹரி இயக்கத்தில் பிரமாண்டமான முறையில் 'ஆறு' என்ற படத்தைத் தயாரிக்கிறது.

'காதல் மன்னன்', 'அமர்க்களம்', 'பார்த்தேன் ரசித்தேன்', 'ஜெமினி', 'ஜே.ஜே', 'அட்டகாசம்', 'வசூல் ராஜா எம்.பி.பி.எஸ்' ஆகிய வெற்றிப் படங்களை இயக்கிய சரண், இந்தப்படத்தையும் இயக்குகிறார்.

'ஆறு' என்று பெயரிடப்பட்டிருக்கும் இத் திரைப்படத்தில் பின்னியெடுக்கும் மின்னலென சூர்யா கதாநாயகனாக நடிக்க, ஜோடியாக திரிஷா நடிக்கிறார். கதையைக் கேட்ட மாத்திரத்தில அதில் மனம் மாறி பறிகொடுத்த சூர்யா, முறுக்கான தோற்றத்திற்காக லண்டன் செல்ல முடிவெடுத்துள்ளார். திரிஷா தனக்கு வந்த இரண்டு தெலுங்குப்பட வாய்ப்புகளைப புறக்கணித்து சாமியில் வந்த மாமிபோல் பெயர் வரக் கூடிய இப்படத்தின் கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார்.

கரடுமுரடான பாதையில் செல்லும் காட்டாறைப் போன்ற ஒரு இளைஞனின் கதை. இது முழுக்க முழுக்க அக்ஷன் படமாகவும் இளமை வீசசுடனும், பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த படமாகவும் இருக்கும்.

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவோம்!

**யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை டெங்கு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக் கப்படவுள்ளது இதையொட்டி பொதுமக்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்தும் முகமாக இக்கட்டுரை பிரசுரிக் கப்படுகிறது.**

இலங்கையில் கடந்த 10 வருடங்களில் டெங்கு நோய் வேகமாக அதிகரித்து வருகிறது. 1995 ஆம் ஆண்டு 440 பேர் டெங்கு நோயால் ப்பாதிக்கப்பட்டு 11 இறப்புக்கள் சம்பவித்தன. 2000 ஆண்டு 5203 நோயாளர்களும் 37 இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

2004ஆம் ஆண்டு 15434டெங்கு நோயாளர்களும் 88 பேர் இறந்தும் உள்ளனர்.


சமீப காலமாக எமது பகுதியில் மழை வீழ்ச்சியில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. விட்டு விட்டுப் பெய்யும் மழை டெங்கு நோய் அதிகரிப்புக்கு மிகவும் வாய்ப்பான சூழலை உருவாக்கும். யாழ். மாவட்டத்திற்கும் டெங்கு உள்ள மற்றைய மாவட்டங்களுக்கும் போக்குவரத்துத் தொடர்பு கூடுதலாக ஏற்பட்டுள்ளதன் காரணமாகவும் பரவும் வாய்ப்பு உண்டு.

யாழ்ப்பாணப் பகுதியில் 2004 ஆம் ஆண்டு 153 நோயாளர் காணப்பட்டதாகவும் 2 மரணம் ஏற்பட்டதாகவும் அறிக்கைகள் காட்டுகின்றன. இந்நோய்க்கான பரிசோதனை வசதிகள் குறைவாக உள்ளமை நோய் அறிவித்தல்கள், தனியார் வைத்தியசாலைகளில் இருந்து பெறப்படாமை ஆகிய பிரச்சினைகளை வைத்துப் பார்க்கையில் இந்நோய் நிலமை பல மடங்கு அதிகமாக உள்ளது என்பது புலனாகும். இந்நோய் அதிகமாக சிறுவர்களைப் பாதிக்கிறது. டெங்கு ஒரு ஆபோ வைரஸ் ஆல் ஏற்படுத்தப்படும் நோய்த் தொகுதியாகும். இதில் (டெங்குக் காய்ச்சல், டெங்கு இரத்தப் பெருக்குடன் கூடிய காய்ச்சல், டெங்கு அதிர்ச்சி அறிகுறிகள் ஆகியவை அடங்கும்).

நான்கு வகையான டெங்கு வைரசுக்கள் இந்நோய்க்குக் காரணமாக உள்ளன. டீஈஎன் 1, டீஈஎன்2, டீஈஎன்3, டீஈஎன்4, ஒரு வகை வைரசு தாக்கமேற்படுத்தி நோய் ஏற்பட்ட பின்னர் அடுத்த முறை மற்றைய வகை வைரஸ் தாக்குதல்களுக்கு இது பாதுகாப்புக் கொடுக்காது.

அப்படியானபடியால் நான்கு முறை ஒருவருக்கு டெங்குக் காய்ச்சல் வரலாம்.

இந்நோய் காவும் நுளம்புகள், ஈடிஸ்இஜிப்ரஸ், ஈடிஸ் அல்மோபிக்டஸ் என இனம் காணப்பட்டுள்ளன. இவை பகல் நேரத்தில் குறிப்பாக



காலை, மாலை நேரத்தில் கடிக்கும் தன்மையுடையன. இதனால் பயணம் செய்யும் போதும், பாடசாலை, வேலை செய்யும் இடத்திலும் என இவை கடித்து டெங்கு நோயை ஏற்படுத்தலாம். டெங்கு நுளம்புகளின் கால்களில் வெள்ளி நிற வளையங்களும், மேல் முதுகுப் புறத்தில் வெள்ளிக் கோடுகளும் காணப்படும்.

### நோயரும்பு காலம்

தொற்றுள்ள நுளம்பு கடித்து 4-6 நாட்களில் நோயறிகுறிகள் காணப்படும்.

### டெங்குக்காய்ச்சல் நோய்க் குணங் குறிகள்

முதலில் தலையிடி, முதுகு நோவு, களைப்பு ஆகியவை காணப்படும். இதைத் தொடர்ந்து,

★ கண்களுக்குப் பின் பகுதியில் நோவு,

★ வெளிச்சத்தைப் பார்க்க முடியாமை,

★ முதுகு நோவு.

★ மூட்டுத் தசை ஆகியவற்றில் கடும் நோவு.

★ 5-7 நாட்கள் காய்ச்சல் நீடிக்கும்.

★ சத்தி தலைச்சுத்து.

★ அறிகுறிகள். 3-4 நாட்களில் குறையும். சிலவேளை டெங்கு இரத்தப் பெருக்குடன் கூடிய காய்ச்சலாக மாறலாம்.

**சி. இராஜேந்திரா**
**யாழ். பிராந்திய மேற்பார்வை**
**பொதுச் சுகாதாரப் பரிசோதகர்**

### டெங்கு இரத்தப் பெருக்குடன் கூடிய அறிகுறிகள்

இது இரத்தப் பெருக்குத் தன்மை கொண்டதாகவும், டெங்குக் காய்ச்சல் அறிகுறிகள் உடையதாகவும் இருக்கும்.

★ செந்நிறப் பருக்கள் தோன்றும்.

★ மூக்கு, முரசு போன்றவற்றிலிருந்து இரத்தக் கசிவு.

★ மண்ணிறமான அல்லது கறுப்பு நிற சத்தி அல்லது மலம்.

★ கடுமையான வயிற்று நோ.

★ கண்கள் சிவந்து இருக்கும்.

★ ஈரல் பெருத்து இருத்தல்.

### அதிர்ச்சியுடன் கூடிய டெங்கு அறிகுறிகள்.

★ காய்ச்சல் திடீரென குறைந்து விடும்.

★ உடல் குளிர்ந்து வெளிறிக் காணப்படும்.

★ அமைதியின்மை, தூக்க நிலை.

★பலவீனமானதும், அதிகரித்தது மான நாடித்துடிப்பு.

★ மூச்சுவாங்கல்

இந் நிலமைகள் நோயாளி மோசமடைவதையும், அதிர்ச்சி நிலைக்கு செல்வதனையும் குறிக்கும்.

அஸ்பிரின் போன்ற மருந்துகள் கொடுத்தலாகாது. பரிசிட்டமோல் மாத்திரம் சரியான அளவில் கொடுக்கப்படல் வேண்டும். டெங்கு அறிகுறிகள் காணப்பட்டதும் தாமதமின்றி நோயாளர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

டெங்கு நோய்க் கட்டுப்பாட்டில் பிரதான இடம் வகிப்பது நுளம்புக் கட்டுப்பாடு ஆகும். அதிலும் நுளம்பு பெருகும் இடங்களை அழித்தல் ஆகும்.

1. நீர் சேகரிக்கும் கொள்கலன்களை மூடி வைத்திருத்தலும் அடிக்கடி உரஞ்சிச் சுத்தம் செய்தலும்.

2. சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், புல் பூண்டுகளை அழித் தல்,

3. நீர் தேங்கக் கூடிய சிரட்டை, கோம்பை,பாவிப்புக்கு உதவாத சட்டி, பானை அலுமினியப் பாத்திரங்கள், போத்தல்பேணி ஆகியவற்றை அழித்தல், அகற்றல் உரிய நடவடிக்கை எடுத்தல்.

4. வாய்க்கால்கள், பீலிகளில் நீர் தேங்காமல் அடிக்கடி சுத்தம் செய்தல்.

பழைய ரயர்கள், மரப்பொந்துகளில் நீர் தேங்காது இருக்க மண் இடுதல், துவாரம் இடுதல்.

6. பூச்சாடிகள் எறும்பு ஏறாமல் இருப்பதற்காக மேடைக்கால்களுக்கு வைக்கும் ஏதனங்களில் உள்ள நீருக்கு உப்பு இடுதல் அடிக்கடி அகற்றுதல்.

7. இத்துடன் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க,

1.வீடுகளுக்கு திரைச் சீலைகள் இடுதல். நுளம்பு புகாமல் தடுக்க வலைகள் இடுதல்.

2. நுளம்புத்திரி பாவித்தல்.

3. கால், கைகளை மூடக்கூடிய சட்டைகளை அணிதல்.

4. சிறுவர்களைப் பகலில் நுளம்பு வலையினுள் படுக்க வைத்தல்.

5 நோயாளர்களை நுளம்பு வலைக்குள் படுக்க வைத்தல்.

இந்நோய்க் கட்டுப்பாட்டில் முக்கியமாக கவனிக்க வேண்டியவை.

★மக்கள் டெங்கு நோய் பற்றிய அறிவையும் ஏற்படக் கூடிய ஆபத்தையும் அறிதல்.

★ சூழலை சுத்தமாக வைத்திருத்தலும், நீர் தேங்காத முறையில் கொள்கலன்களில் உள்ள நீரை உரிய முறையில் கையாளுதல்.

★ நோய் காணப்பட்டால் இரத்த மாற்றீடு பெறக் கூடிய வைத்திய சாலைக்கு நோயாளியை அனுமதித்தல். நோயாளியைத் தனிமைப்படுத்துதல்.

★ சகல மக்களும் இந் நோய்க் கட்டுப்பாட்டுக்கு தத்தமது பங்களிப்பை வழங்குதல்.

இவற்றின் மூலம் இக் கொடிய நோயை சமூகத்திலிருந்தும், எமது பகுதிகளிலிருந்தும் இல்லாமல் செய்ய முடியும். □

# குமுதினிப்படகுப் படுகொலையின் 20ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று

(நெடுந்தீவு)

ஈழத்தமிழர்களின் வாழ்வில் ஆறாத வடுக்களாக பதிந்திருக்கும் குமுதினிப் படுகொலையின் 20 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவில் பேரெழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

1985 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி காலை 7.30 மணியள

படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள்



15-5-85ல் குமுதினிப் படகில வெட்டப்பட்டு இறந்தவர்களின் பெயர்கள்

| | |
|---|---|
| த. இராஜேஸ்வரன் | சி. தில்லைநாதன் |
| மு. மணிவண்ணன் | ப. நிர்மலாதேவி |
| த. அமிர்தலிங்கம் | தொ. நாகேந்திரன் |
| செ. சந்திரகுமார் | கு. விநாயகமூர்த்தி |
| சா. குசலகுமாரி | ஞா. மரியமாணிக்கம் |
| கு. கனகலிங்கம் | செ. கிறிஸ்ரினம்மா |
| அ. அந்தோனிப்பிள்ளை | ப. சொர்ணமமா |
| ஞா. தேவசகாயம்பிள்ளை | வே. புஸ்பராணி |

| | | |
|---|---|---|
| [illegible]விந்தன் | ஜி. எலிசம்மா | வி. சுபாசினி |
| [illegible]நாயகம் | ஐ. தெய்வானை | த. சசிகலா |
| வே. [illegible]ணதயா | ப. யோகராசா | ப. நிர்மலா |
| [illegible]தாசன் | வே. சின்னையா | அ. அருசியா |
| சி. அந்தோனி | வை. சதாசிவம் | இ. கனகம்மா |
| இ. முருகன் | ந. கந்தையா | ப. மரியம்மா |

க. ஞானியேசு — க. சதாசிவம்

கொலையுண்ட பிஞ்சு ....



வில் ஆழ்கடலில் கடற்படையினரால் குமுதினிப் படகு வழிமறிக்கப்பட்டு, அதில் சென்ற பயணிகளில் 6 மாதக்குழந்தை உட்பட 36 பேர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். இதில் 30க்கும் மேற்பட்டோர் படுகாயப் படுத்தப்பட்டனர்.

இந்தப் படுகொலையின் 20 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நெடுந்தீவு மாவலித்துறையில் அமைந்துள்ள குமுதினிப் படுகொலை நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட நேரமான காலை 7.30 மணிக்கு படுகொலை நடைபெற்ற கடற்பரப்புப் பகுதியில் குமுதினிப் படகில் சென்று மக்கள் மலர்தூவி, நினைவுச்சுடரேற்றி அஞ்சலி நிகழ்வினை ஆரம்பிக்கவுள்ளனர்.

பின்னர் கரைக்குத் திரும்பி நெடுந்தீவு மாவலித்துறையிலுள்ள நினைவு மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன. (ற-4)

# ஜே. வி. பியினர் வெளிநடப்பு; அமைச்சரவை அறிக்கை வாபஸ்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையையும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் மீளக் கட்டியெழுப்புவது தொடர்பாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை வாபஸ் பெறப்பட்டுள்ளது.

அரசாங்க அமைச்சர்களுடனும், ஜனாதிபதியுடனும் கடுமையான வாக்குவாதப்பட்ட ஜே.வி.பியினர் அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து கடந்த வாரம் வெளிநடப்புச் செய்திருந்தனர்.

அரச நிறுவனங்கள் பொதுக் கம்பனிகளாக மாற்றப்படக்கூடாது என அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

அமைச்சரவை அறிக்கை வாபஸ் பெறப்படும் வரை தாம் பகிஷ்கரிக்கப் போவதாகக் கடந்த புதன் கிழமை ஜே.வி.பியினர் வெளி நடப்பு செய்திருந்தனர்.

எனினும் இவற்றை மீளக்கட்டியெழுப்பும் புதிய முயற்சிகள் அடங்கிய பிரேரணைகள் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. எனினும் இது எப்போது எனக் குறிப்பிடப்பட வில்லை.

இதேவேளை வியாழனன்று மின்சாரசபை வர்த்தகசங்கங்களுட னும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும், சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கியுடனும் இடம்பெற்ற சந்திப்பின் போது நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் உடனடியாக இலாபம் ஈட்டக் கூடியதாக மாற்றப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப் பட்டது. (ற-6)

# மகனைக் காணவில்லையென ம.உ.ஆ.குழுவில் தந்தை முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

தனது மகனைக் காணவில்லையென தந்தையொருவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் பபிலரூபன் (வயது 13) என்பவரையே கடந்த புதன் கிழமையில் இருந்து காணவில்லை என அச் சிறுவனது தந்தை பாலசுப்பிரமணியம் நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்ற சிறுவனைக் காணவில்லை என செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சிறுவனைப் பற்றி தகவல் தெரிந்தால் 0779007574 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்கும்படி தந்தையார் கேட்டுள்ளார். (ற-19)

## நேர்முகத்தேர்வு

(கொழும்புத்துறை)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இந்து கலாசார உத்தியோகஸ்தர் மற்றும் இந்து ஆராய்ச்சி உத்தியோகஸ்தர் பதவிகளுக்கு விண்ணப் பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு கொழும்பு, காலி வீதியில் அமைந்துள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக் களத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. (க-51)

# மரவேலைப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொழில்துறைத் திணைக்களத்தின் யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆகிய இடங்களிலுள்ள இரு மரவேலை பாடசாலைகளிற்கும் 14-30வயதிற்குட்பட்ட மரவேலை பயிற்சியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு பயிற்சிப் பாடசாலைக்கு முன்னுரிமை அடிப்படையில் 12 பேர் பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்படுவார்கள்.

பயிற்சியில் ஈடுபடுபவர்களுக்கு நாளாந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படுவதோடு பயிற்சிக் காலத்தில் அவர்களால் மேற்கொள்ளப்படும் வேலைகளின் இலாபத்தில் 80 சதவீதமும் வழங்கப்படும்.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமாக சுயவிபரக் கோவையினைத் தயாரித்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட தொழில்த் துறைத் திணைக்களத்திற்கு அல்லது யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கு அல்லது உடுவில் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (ற-19)

# பேச்சு மூலமே பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு 72 சதவீதத்திற்கும் அதிகமானோர் விருப்பம்

## -மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கருத்துக்கணிப்பு

(கொழும்பு)

நாட்டில் யுத்தம் இல்லை, சமாதானமும் இல்லை என்ற நிலை உசிதமற்றது என்று அண்மையில் நடைபெற்ற கருத்துக்கணிப்பொன்றில் பெரும்பாலானோர் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண சமாதானப் பேச்சுவார்த்தைக்கு மீண்டும் திரும்ப வேண்டும் என்று 72 சதவீதத்திற்கு அதிகமானோர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

சிங்கள மக்களில் 63 சதவீதத்தினரும், தமிழ் மக்களில் 82 சதவீதத்தினரும், முஸ்லிம்களில் 85 சதவீதத்தினரும் இந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன் மலையகத் தமிழர்களில் சுமார் 78 சதவீதத்தினரும் இதே கருத்தினையே தெரிவித்துள்ளனர். இந்தக் கருத்துக் கணிப்பு இந்த ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்டது. மாற்றுக் கொள்கைக்கான நிலையம் இந்தக் கருத்துக் கணிப்பை நடாத்தியது.

மேலும் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வுக்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது என்று 53 சதவீதத்திற்கும் அதிகமானோர் கருதுகிறார்கள்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்திற்குப் பின்னர் இந்த விகிதாசாரம் அதிகரித்துள்ளது. (ற-4)

# கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்த அனைவரும் ஒன்றுபட வேண்டும்

## ஹான்ஸ் பிரட்ஸ்கர்

(கிளிநொச்சி)

கிழக்கில் தொடரும் வன்முறைகளுக்கு முடிவுகட்டி இயல்புநிலையை ஏற்படுத்துவதற்கு அனைவரும் முன்வரவேண்டும் என நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பினை முடித்துக் கொண்டு ஊடகவியலாளருக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமக்கு அக்கறைக்குரிய முக்கிய விடயங்கள் குறித்து பேச்சுக்களில் ஈடுபட்டதாகவும், முக்கியமாக கிழக்கில் தொடரும் வன்முறைகள், கொலைகள் என்பன குறித்து தாங்கள் பேசியதாகவும் பிரட்ஸ்கர் கூறினார்.

பொதுக்கட்டமைப்புக் குறித்துக் கேட்டதற்கு உத்தேச பொதுக்கட்டமைப்பு குறித்து அரச தரப்பில் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இரு தரப்பும் இது தொடர்பாக எப்போது கையெழுத்திடுவார்கள் என்று என்னால் தெரிவிக்க முடியாது. எனினும் அது குறித்தும் தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடியதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

# பாபாவுக்கு கையில் எலும்பு முறிவு

(பெங்களூர்)

பெங்களூரில் உள்ள தனது ஆச்சிரமத்தில் பக்தர்களுக்கு ஆசி வழங்க வந்த சாய்பாபா வழுக்கி விழுந்தார். இதனால் அவரது இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

கோடை காலத்தில் தனது ஆந்திர ஆச்சிரமத்தைத் தவிர்த்து விட்டு பெங்களூர் காடுகோடியில் உள்ள பிரமாண்டமான பிருந்தாவன் ஆச்சிரமத்தில் சாய்பாபா தங்குவது வழக்கம்.

முன்னதாக கொடைக்கானலில் 10 நாட்கள் ஓய்வெடுத்த பாபா பின்னர் மதுரையில் சத்யசாய் நகரில் பக்தர்களுக்கு ஆசி அளித்தார்.

இந் நிலையில் கடந்த திங்கட் கிழமை பெங்களூர் ஆச்சிரமத்திற்கு வந்த பாபா அங்கேயே தங்கியிருந்து காலை மாலை இரு வேளையும் பக்தர்களுக்கு ஆசி வழங்கி வந்தார்.

கடந்த 12ஆம் திகதி அவர் ஆசி வழங்குவதற்காக சாய்ரமேஷ் அரங்கத்திற்கு வந்தபோது திடீரென கால் வழுக்கி கீழே விழுந்தார். அப்போது கையை ஊன்றியதில் அவரது இடது கையில் லேசான எலும்பு முறிவு ஏற்பட்டது.

இதைப் பார்த்து அதிர்ந்து போன பக்தர்களும் ஆச்சிரம நிர்வாகிகளும் பாபாவை கைத்தாங்கலாக அழைத்துச் சென்றனர்.

பெங்களூரில் தனது ஆச்சிரமத்தின் அருகிலேயே பாபா மிகப் பெரிய இலவச நவீன மருத்துவமனையை



நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அவர் ஓய்வில் இருப்பதால், பக்தர்களை சந்திக்கும் நிகழ்ச்சி இரத் துச் செய்யப்பட்டுள்ளது. (ற-4)

# வைத்தியர்கள் மீது திடீர் நடவடிக்கை

(கொழும்பு)

அரச சேவையின் கடமை நேரத்தின் போது பிரத்தியேகமான முறையில் தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை வழங்கிய மூன்று வைத்தியர்களை சுகாதார அமைச்சின் விசாரணை திடீர் தேடுதல் குழு கண்டுபிடித்துள்ளது.

இந்த வைத்தியர்கள் இரத்தினபுரி, அம்பலாங்கொடை, எம்பிலிப்பிட்டிய பகுதிகளில் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை வழங்கியுள்ளனர்.

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் உத்தரவின் பேரிலேயே இந்தக் குழு திடீர் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டது. இச் சம்பவம் குறித்து விசேட அறிக்கை ஒன்று தேசிய சேவைகள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். (ற-8)

# வெண்மை வாணிபர்களின் பிரச்சினைகள் ஆராய்வு

வெண்மை வாணிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று முன்தினம் சங்கத் தலைவர் க.பரணிதரன் தலைமையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் கலந்துகொண்டார்.

வெண்மை வாணிபர்களின் நலன்கள் அனைத்தையும் சங்கத்தின் ஊடாக முன்னெடுப்பது எனவும், அரசின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டித்து முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு வெண்மை வாணிபர் சங்கம் பக்கபலமாய் நின்று உழைக்கும் எனவும் இதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(ற-43)

# உதவும் நாடுகளின் மாநாட்டை இரத்துச் செய்க!

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசுக்கு சர்வதேசம் வழங்கும் நிதி உதவிகளை யுத்தத்திற்கான நிதியாகவே தாங்கள் கருதுவதாகவும், எனவே எதிர்வரும் 16, 17 ஆம் திகதிகளில் கண்டியில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டினை இரத்துச் செய்யுமாறும் கோரி யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி மகஜரில், சிங்கள அரசுகள் இனக் கொலைகள் மூலம் தமிழ் மக்களை ஒழித்துக் கட்டுவதற்குக் கடைப்பிடித்து வந்த கொடிய ஒடுக்குமுறைகளின் விளைவாக சுயநிர்ணய உரிமை கோரி தமிழ் மக்கள் போராடி வருவதை நீங்கள் அறிந்ததே.

ஸ்ரீலங்கா அரசின் 25 வருட பேரினவாத போர் அரசியலினால் பாதிக்கப்பட்டு பெரும் அழிவுகளையும் உயிரிழப்பையும் சந்தித்த எமது மக்களின் வாழ்வியலில் முன்னேற்றத்தைக் காணபதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த சமாதான காலங்களில் கூட சமாதானத்தின் நன்மைகள் எமக்குக் கிடைக்கவில்லை. மாறாக தென்னிலங்கையே அதிக நன்மை கண்டுள்ளது. சுயபலத்துடன் எம்மை நாமே மேம்படுத்துவோம் என்ற நம்பிக்கையுடன் எழுந்த எம்மக்கள் முற்றுமுழுதாக ஸ்ரீலங்கா அரசினால் கவனிக்கப்படவில்லை.

அழிவுகளுக்காக சர்வதேசங்களினால் வாரி வழங்கப்பட்ட பெரு நிதிகளும் மனிதாபிமான உதவிகளும் பாதிக்கப்பட்ட எம்மக்களுக்குக் கிடைக்கவில்லை. சிங்களப் பேரினவாதிகளும் ஸ்ரீலங்கா அரசுகளும் காட்டி வந்த வரலாற்று பாரபட்சமே தொடர்ந்தும் இங்கும் அரங்கேறி வருகிறது.

இதனால் எமது மக்களின் அரசியல், பொருளாதாரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தாத எந்த அரசையும் அரசியல் கட்சிகளையும் நாம் நம்புவதற்கில்லை.

எனவேதான் ஸ்ரீலங்கா அரசுக்கு அபிவிருத்தி என்ற அடிப்படையில சர்வதேச சமூகம் வழங்குகின்ற நிதியை நாம் முழுமையாக வெறுக்கின்றோம். காரணம் ஸ்ரீலங்கா அரசு போரினால் சீரழிந்து போன தனது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் மீண்டும் போருக்குத் தன்னைத் தயார் படுத்தவும் ஆயுதக் கொள்வனவில் கையூட்டல்களை ஊக்குவிக்கவும் இது முற்று முழுதாகவே உதவப்போகிறது.

இவற்றில் சர்வதேச சமூகம் விழிப்பாயிருந்து ஸ்ரீலங்காவில் நடைபெற விருக்கின்ற சர்வதேச நிதி நிறுவனங்களின் 2005ஆம் ஆண்டின் மாநாட்டை ரத்துச் செய்யும்படி நீதியின் பெயரால் தங்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)


## வலம்புரி

## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுநர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில் பிரதேச செய்தியாளர்களை (பயிலுநர்கள்) நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த.(சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.
- பயிலுநர்கள் தரத்தில் 3 மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் ஆர்வமும் காணப்படுமிடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.
- பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- இலங்கையிலிருந்து வெளிவரும் வேறு பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியாது.
- ஏற்கனவே பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தர செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

தகுதியானவர்கள் முழுப் பெயர் ,நிரந்தர முகவரி, தபால் முகவரி, பால், பிறந்த தேதி, தே.அ.அ. இல; விவாக நிலை ,தொழில் புரியும் இடம் ,பதவி (இருப்பின் ) கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, பிரதேசசபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம்(இருப்பின்), கல்வித்தகைமை என்பவை உள்ளீட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை,

*பிரதம ஆசிரியர் வலம்புரி,*
*15 வெள்ளாந் தெரு,*
*வண்ணார் பண்ணை*
*யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு 31.05.2005 ஆம் தேதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அன்றேல் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

*-நிர்வாக உத்தியோகத்தர்.*

## பிரதேச செய்தியாளர் (பயிலுநர்) தெரிவுக்கான பிரதேசங்கள்

*வலிகாமம்*

திருநெல்வேலி
நல்லூர்
கந்தர்மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தன்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
கொழும்புத்துறை
பாசையூர்
வண்ணார்பண்ணை
கொட்டடி
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
அச்செழு
புன்னாலைக்கட்டுவன்
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை

*வடமராட்சி*

கரவெட்டி
கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானாறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரிமூலை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
கொற்றாவத்தை
பொலிகண்டி

*தென்மராட்சி*

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

*தீவகம்*

நெடுந்தீவு
மண்டைதீவு
ஊர்காவற்றுறை
வேலணை
புங்குடுதீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்
நயினாதீவு

*வன்னி*

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவமடு

# இந்தியாவுடன் சீனாவை மோதவிட நிக்சனும் ஹென்றியும் செய்த சதி!

## அம்பலப்படுத்துகிறது இரகசிய ஆவணம்

(வோஷிங்டன்)

வங்கதேச யுத்தத்தின்போது இந்தியா மீது போர்தொடுக்கும்படி சீனாவை அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி நிக்சனும், வெளியுறவு அமைச்சா ஹென்றி கிஸிங்கரும் தூண்டினார்கள் என்பதை அம்பலப்படுததும் இரகசிய ஆவணம் வெளியாகியுள்ளது.

1971இல் வங்கதேச யுத்தம் நடந்த போது, அந்த யுத்தத்தில் சீனாவையும் இழுத்துவிட அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் சதி செய்தார் என்பதை அம்பலப்படுத்தும் இரகசிய ஆவணம் (DECLASSIFED DOCUMENTS) அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனில் வெளியாகியுள்ளது.

தற்போதைய வங்கதேசம் அப்போது பாகிஸ்தானில் இருந்தது. கிழக்கு பாகிஸ்தான் என்று அதற்குப் பெயர். கிழக்கு பாகிஸ்தானில், பாகிஸ்தான் இராணுவம் பயங்கர அட்டூழியம் செய்தது. பாகிஸ்தான் இராணுவத்தின் கொடூர அட்டூழியங்களை எதிர்த்து வங்கதேச மக்கள் சேக்முஜிபுர் ரஹ்மான் தலைமையில் விடுதலைப் போராட்டம் நடத்தினர். வங்கசேத மக்களின் அந்த விடுதலைப் போராட்டத்திற்கு இந்தியா சகல உதவிகளையும் செய்தது.

இது அமெரிக்காவுக்குப் பிடிக்கவில்லை. இந்நிலையில் இந்தியாவுக்கு எதிராக சீனாவை போர் தொடுக்கவைக்க நிக்சனும், கிஸிங்கரும் தீவிரமாக முயன்றதை அந்த இரகசிய ஆவணங்கள் அம்பலப்படுத்துகின்றன.

கிழக்கு பாகிஸ்தான் பிரச்சினை தொடர்பாக நிக்சனும், கிஸிங்கரும் இரகசிய பேசசு நடத்தியதில் அப்பட்டமாக இந்தியாவுக்கு விரோதமான நிலையை எடுத்தனர்.

ஆயினும், 1971இல் தெற்காசியாவில் நடந்த அந்தப் போரில் நேரிடையாக தலையீடு செய்ய அமெரிக்கா தயக்கம் காட்டியது. இருந்தபோதிலும் சோவியத் யூனியன் என்ன செய்யப்போகிறது என்பதை அமெரிக்கா மிகவும் உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தது.

1971இல் நடந்த இந்திய - பாகிஸதான் யுத்தததில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக சீனாவை எப்படியும் தள்ளிவிட வேண்டும் என்பதில் நிக்சனும், கிஸிங்கரும் தீவிரமாக வேலை செய்தனர்.

பாகிஸ்தானுக்கு நெருங்கிய நண்பன் சீனா. இந்தியாவை சோவியத் ஆதரிக்கிறது. சோவியத் செல்வாக்கு வளர்வதை சீனா விரும்பாது. இந்தியாவும், சீனாவும் ஏற்கனவே 1962இல் யுத்தம் செய்தன. எனவே, இந்தியாவை, சீனாவுக்குப் பிடிக்காது. ஆகையால், யுத்தத்தில் இந்தியாவுக்கு எதிராக சீனாவைக் கிளப்பிவிடலாம் என நிக்சனும், கிஸிங்கரும் கணக்குப்போட்டனர்.

இந்த சதியின் துவக்கமாக, ஐ.நா.வுக்கான அப்போதைய சீனத்தூதர் ஹுவாங ஹுவாவை கிஸிங்கர் சந்தித்துப் பேசினார். பாகிஸ்தானுக்கு ஆதரவாக சீனா இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சீனத்தூதரை கிஸிங்கர் கேட்டுக்கொண்டார்.

இந்திய - பாகிஸ்தான் போரில் சோவியத்யூனியன் தலையீடு செய்யுமானால் சீனாவுக்கு ஆதரவாக அமெரிக்கா இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என சீனத்தூதரிடம் கிஸிங்கர் உறுதியளித்தார்.

இந்தியாவுக்கு எதிராக சீனாவை இழுத்துவிட நிக்சனும், கிஸிங்கரும் ஆலோசனை நடத்தியதாக தற்போது வெளியாகியுள்ள இரகசிய ஆவணங்களிலிருந்து தெரியவந்துள்ளன. (ற)

# உஸ்பெகிஸ்தானில் தீவிரமடையும் கிளர்ச்சி

(உஸ்பெகிஸ்தான்)

**உஸ்பெகிஸ்தானில் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் தீவிரமடைந்து வருகின்றன.**

நேற்றைய தினம் கிளர்ச்சிவாதிகள் பொலிஸ் நிலையத்தைக் கைப்பற்றியதுடன் இராணுவ முகாம்களைச் சுற்றி வளைத்து சிறைச்சாலையை உடைதது அதிகளவிலான கைதிகளை விடுவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து 10 பொலிஸாரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ள கிளர்ச்சிவாதிகள் அரச கட்டடத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாக அறவிக்கப்படுகின்றது.

பொலிஸாரை விடுவிக்கவும் அரச கட்டத்தை மீளக் கைப்பற்றவுமென உஸ்பெகிஸ்தான் இராணுவம் நேற்றுமுன் தினம் அக்கடடடத்தினுள் பிரவேசித்தது.

அங்கு இடம்பெற்ற மோதலில் 10 பேர் இறந்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானுடன் எல்லைக் கோட்டைக் கொணட மத்திய ஆசிய நாடான உஸ்பெகிஸ்தான், 2001ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில அமெரிக்காவில் இடம்பெற்ற வர்த்தகமையத் தாக்குதல் சம்பவத்தைத் தொடந்து தனது நாட்டில் விமானத்தளமொன்றை அமெரிக்கா அமைபதற்கான அனுமதியை வழங்கியிருந்தது.

1991ஆம் ஆண்டில் சோவியத் யூனியனிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்ற பின்னர் அந்நாட்டின் ஜனாதிபதியாக தரிமோ இருந்து வருகிறார். இவரது நிர்வாகத்தின் கீழ் மனித உரிமைகள் மீறப்படுவதாக மேற்குலக நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன.

உஸ்பெகிஸ்தானில் ஆறாயிரத்துக்குமதிகமான சமய, மற்றும் அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளில் உள்ளதாக மனித உரிமைகளுக்காகப் போராடும் குழுக்கள் தெரிவித்துள்ளன. (ற-7)

WORLD NEWS உலக தரிசனம்

# சுமாத்திராவில் பூமியதிர்ச்சி

இந்தோனேஷியாவின் சுமாத்திராவில் நேற்று முற்பகல் 6.9 றிக்டர் அளவில் பூமியதிர்ச்சி இடம்பெற்ற போதிலும் சுனாமிப் பேரலை இடம்பெறுவதற்கான வாய்ப்பு இல்லையென இந்தோனேஷியாவின் புவி அதிர்வு பதிவு நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தப் பூமியதிர்ச்சி ஆழ்கடலுக்கு அடியில் இடம்பெற்றுள்ளதினால் மக்களை அஞ்சத் தேவையிலலையென பூகம்பம் மற்றும் எரிமலை ஆய்வு நிலைய அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பூமியதிர்ச்சியை அடுத்து அல்லோல கல்லோலப்பட்ட மக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுனாமிப் பேரலை ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக மேட்டுநிலப் பகுதிகளை நோக்கி மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளதாக இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியதிர்ச்சி இடம்பெற்ற போதிலும் உயிரிழப்புக்களோ சேதங்களோ ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்டுகின்றது.

மேற்கு சுமாத்திராவிற்கு வடமேற்கே இருக்கின்ற பட்டான் நகரில் இந்தப் பூமியதிர்ச்சி மையம் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பூமியதிர்ச்சியின் அதிர்வுகள் நியாஸ் தீவிலும் உணரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

# நாடாளுமன்றை கலைத்து விடுவேன்; வங்கதேசப் பிரதமர் எச்சரிக்கை

(டாக்கா)

நாடாளுமன்றக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும், தொகுதிப்பிரச்சினைகளைப் பேச வேண்டும், விவாதங்களைக் கூர்ந்து கவனிக்கவேண்டும, அரசு கொறடா பிறப்பிக்கும் கட்டளைகளைக் கவனித்துச் செயல்படவேண்டும், இல்லாவிட்டால் நாடாளுமன்றத்தையே கலைத்துவிடுவேன் என்று வங்கதேசப் பிரதமர் காலிதா ஜியா எச்சரித்துள்ளார்.

ஆளும் வங்கசேத தேசியவாத கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் பேசுகையிலேயே இந்த எச்சரிக்கையை அவர் விடுத்தார்.

300 உறுப்பினர்களைக் கொண்ட வங்கதேச நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு 180 றகும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். 2007 இல் தான் அடுதத பொதுத்தேர்தல நடைபெறவேண்டும். சமீபத்தில் நடந்த டாக்கா மேயர் தேர்தலில் ஆளும் கட்சியின் அமைச்சரே வேட்பாளராகப் போட்டியிட்டுப் பிரதான எதிர்க் கட்சியின் வேட்பாளரிடம் தோற்றார். அவர் 3ஆவது முறையாகத் தொடர்ந்து வெற்றி பெற்றிருக்கிறார்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் அவைக்கு வராமல் தங்களுடைய சொந்த வேலையாக அங்கும் இங்கும் அலைவதால் முக்கிய நேரங்களில் அவையில் இருப்பதில்லை. இதை மனதில் வைத்தே பிரதமர் இந்த எச்சரிக்கையை விடுத்தார். (ற)

# தெலுங்குதேசம் தொண்டர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

## 5 பேர் பலி; பலர் படுகாயம்

(ஹைதராபாத்)

இடைத்தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலின்போது கலவரம், தெலுங்கு தேசம் தொண்டர்கள் மீது பொலிஸ் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 5 தொண்டர்கள் பலியானார்கள். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

ஆந்திரப் பிரதேசம் அனந்தபூர் மாவட்டம் பெனுகொண்டா தொகுதியில் ஜூன் இரண்டாம் திகதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காக தெலுங்குதேசம் கட்சி சார்பில் வேட்புமனுத்தாக்கல் செய்ய தெலுங்குதேசம் கட்சியைச் சேர்ந்த சுனிதா சென்றார். அவருடன் கட்சித் தொண்டர்களும் கூட்டமாகச் சென்றனர். அப்போது பொலஸாருக்கும், தெலுங்குதேசம் தொண்டர்களுக்குமிடையே மோதல் ஏற்படடது. இதைத்தொடர்ந்து மனுத்தாக்கல் செய்யுமிடமான ஆர்.டி.ஓ.அலுவலகம் முழுவதும் பதற்றம் நிலவியது. சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு தெலுங்கு தேசத் தொண்டர்கள் அங்கு பணியில் நின்ற பொலிஸார் மீது கல்வீசி தாக்கினார்கள். இதைக் கட்டுப்படுத்த தடியடி நடத்தினார்கள். இதனால் மேலும் பதற்றம் அதிகரித்தது.

கூட்டம் கட்டுககடங்காமல் கலவரம் வெடித்தது. பொலிஸாரும் தெலுங்கு தேச தொண்டர்களும் சரமாரியாக ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர். கலவரம் கட்டுக்கடங்காமல் போகவே பொலிஸா துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில் தெலுங்குதேசம் தொண்டர் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார். மறறும் நான்கு பேர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்தார்கள். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

துப்பாக்கிச்சூட்டால் ஆத்திரமடைந்த தெலுங்கு தேசம் தொண்டர்கள் ரோட்டில் நின்ற வாகனங்களை அடித்து நொருக்கினர். (ற)

# கதாநாயகனான ரோபோ



'ஸ்டார் வோர்ஸ்' படத்தின் 3ஆவது பாகத்தில் முக்கிய கதாபாத்திரமாக நடித்திருக்கும் ரோபோ இது. 'ஸ்டார் வோர்ஸ்' என்ற ஆங்கிலப்படம வெளியாகி வெற்றிகரமாக ஓடியது.

இந்தப் படத்தின் 2 பாகங்கள் ஏற்கனவே வெளியாகிவிட்டன. தற்போது இதன் 3 ஆம் பாகம் சமீபத்தில் திரைக்கு வந்தது. இந்த 3ஆம் பாகத்தின் சிறப்புக் காட்சி லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் திரையிடப்பட்டது.

இந்தச் சிறப்புக் காட்சியின் போது இந்தப் படத்தன் முக்கிய கதாபாத்திரமாக நடித்து இருக்கும் ரோபோவும் காட்டப்பட்டது. இது ரிமோட் மூலம் இயங்கக் கூடியது. ஏராளமானவர்கள் இச் சிறப்புக் காட்சியைக் கண்டுகளித்தார்கள். (ற)

# விமானத்தை திருப்பியனுப்பிய அமெ.

பிரான்ஸிலிருந்து வந்த விமானத்தில் தீவிரவாதி ஒருவன் இருப்பதாகக் கூறி அந்த விமானத்தை அமெரிக்கா வேறு இடத்தில் தரையிறங்க வைத்தது.

பாரிஸில் இருந்து பாஸ்டன் நகருக்கு வந்த எயர் பிரான்ஸ் -332 விமானத்தில் தீவிரவாதி இருப்பதாகக் கூறி அந்த விமானத்தை மெய்ன் நகர விமான நிலையத்துக்கு அமெரிக்கா திருப்பிவிட்டது.

அந்தப் பயணியை விசாரிப்பதற்காக எவ.பி.ஐ. அமெரிக்கப் போக்குவரத்துப் பாதுகாப்பு ஆணையம், விமானத்துறை ஆணையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மெயின் நகருக்கு விரைந்துள்ளனா. அந்தப் பயணியிடம் விசாரணை நடத்திவிட்டு அவரைத் திருப்பி பிரான்ஸுக்கே அனுப்பப்போவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நியூயோர்க் தாக்குதலுக்குப் பின், அமெரிக்காவுக்குச் செல்லும் அனைத்துலக விமானங்களில் பயணம் செய்யும் பயணிகளின் பட்டியல், விமானம் புறப்பட்டவுடன் அந்நாட்டுக்கு அனுப்பிவைக்கப் படுகிறது. (ற)

# ஆப்கானில் பேரணியில் கலகம் பொலிஸார் உட்பட 9 பேர் பலி

(ஆப்கானிஸ்தான்)

அமெரிக்க குவாண்டலஜரா தடுப்பு முகாமில் பணியாற்றும் அமெரிக்கர்கள் இஸ்லாமியர்களின் புனித நூலான குர் - ஆனை கழிப்பறையில் வைத்து அவமானப்படுத்தினார்கள் என்று வெளியான செய்திகளை அடுத்து ஆப்கானிஸ்தானில் அமெரிக்க எதிர்ப்பு கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்ட வண்ணமுள்ளன.

நேற்றுமுன்தினம் 4ஆவது நாளாக இடம்பெற்ற கண்டனப் பேரணியின் போது இடம்பெற்ற கலவரம் துப்பாக்கிப் பிரயோகத்தில் 9பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் காபூலின் தென் மேற்கே உள்ள காஸ்மீர் மாகாணத்திலேயே பாரிய கலவரங்கள் இடம்பெற்றுளளன.

இப் பிராந்தியத்தில் 4 பொலிஸாரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸதானில் அமெரிக்கப்படைகள் ஆக்கிரமிப்பு செய்து தலிபான் நிர்வாகத்தை அகற்றியதன் பின்பு அமெரிக்காவிற்கு எதிரான போராட்டம் வெளிப்படையாக இடம்பெற்றது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-9)

# 12 தொன் போதைவஸ்து மீட்பு

கொலம்பிய அரச நிர்வாகம் 12 தொன் நிறையுடைய போதைவஸ்தை கைப்பற்றியுள்ளது.

கைப்பற்றப்பட்ட இந்தப் போதைப் பொருட்களின் பெறுமதி 30 கோடி அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கொலம்பியன் கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட அதிரடிச் சோதனையில் 5 சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ற-9)

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல் - குறள்

வலம்புரி

# நல்ல சகுனம்

"ஆழிப்பேரலை அனர்த்த புனரமைப்பு மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்குவது மிகவும் அவசியமானது. இதனை நாம் வரவேற்கிறோம்."

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லான்ஸ்ரீட் பொதுக்கட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்தி கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலில் ரணகளப்பட்டுக்கொண்டிருக்கும் விவகாரம் பொதுக்கட்டமைப்புத்தான். பலத்த எதிர்ப்புக்களும், ஆதரவுகளும் பொதுக்கட்டமைப்பை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன.

இந் நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை இலங்கை அரசு உருவாக்க வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதொரு விடயமாகும்.

பொதுக்கட்டமைப்பின் அவசியத்தை அமெரிக்கா உணர்ந்துகொண்டு இலங்கை விடயத்தில் அதுவும் தமிழ் மக்கள் விடயத்தில் நல்லதொரு முடிபை வெளியிட்டமை சமாதான முன்நகர்வுகளுக்கு நல்லதொரு சகுனமென்றே கொள்ளப்படுகிறது.

இலங்கைத் தீவில் நீண்டநெடும் காலமாக இன்னல்களையும் வேதனைகளையும் சுமந்து வாழும் இனம் தமிழினம். இவர்களின் துன்பச் சுமை இன்னமும் இறங்கவில்லை. துன்பத்துக்கு மேல் துன்பம் என்ற வகையில் ஆழிப்பேரலையின் அழிவு அலையும் தமிழர் தாயகத்தை மோசமாகத் தாக்கி அழிவின் துயரை நீட்டியுள்ளது.

இந் நிலையில் பொதுக்கட்டமைப்பு என்பது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு அல்ல. ஆழிப்பேரலை அழிவுகளை மீள்கட்டமைப்பு செய்தலுக்கான இணக்கப்பாட்டு முகாமை நடவடிக்கையாகும்.

இதனை உருவாக்குவதை பாரிய அரசியல் நெருக்கடிவாய்ந்த விடயமாக்கியமை அரசின் கபட நோக்கமே.

இனப்பிரச்சினைத் தீர்வை, சமாதான முயற்சிகளின் அசைவை, முதன்மைப்படுத்தாமல், சாதாரண பொதுக்கட்டமைப்பு விடயத்தை பூசணிப் பழம்போல் பெரிதாகக் காட்டியமை முதன்மையான பிரச்சினைகளை மூடி மறைப்பதற்காகவே என்பதை இன்று அமெரிக்கா உட்பட சர்வதேசம் தெளிவாகப் புரிந்துகொண்டுள்ளது.

இதன் வெளிப்பாடு தான் பொதுக்கட்டமைப்பை உருவாக்கி, சமாதான முயற்சிகளை துரிதப்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளமையாகும்.

பொதுக்கட்டமைப்புக்கான அமெரிக்காவின் பச்சைக் கொடி ஜே.வி.பி. மற்றும் இனவாதக் கட்சிகள் உட்பட இந்திய ஆளும் வர்க்கத்திற்கும் நல்லதொரு படிப்பினையாகும். எதனையும் ஆழ்ந்து யோசிக்காமல் குறுகிய ஒரு வட்டத்திற்குள் தொடர்ந்தும் நின்றுகொண்டு எதிர்ப்பையே தாரகை மந்திரமாக ஓதும் இச் சக்திகள் அமெரிக்காவின் புதிய மாற்றத்தால் அதிர்ந்துள்ளன.

சர்வதேசத்தில் தமிழ் மக்கள் மீதான பார்வையில் நல்லதொரு மாற்றம் ஏற்பட்டு வருவதையே அமெரிக்காவின் ஆதரவு வெளிப்படுத்தியுள்ளது. தமிழ் மக்களின் நியாயமான, நீதியான உரிமையின் குரல் சர்வதேசத்திற்கு தற்பொழுதுதான் தெளிவாகப் புரிய ஆரம்பித்துள்ளது.

உண்மையை நீண்டகாலம் மூடி மறைக்க முடியாது. தமிழ் மக்களின் உண்மை நிலை அவர்களின் அடிப்படையான அபிலாஷைகள் சர்வதேசத்திற்கு தெளிவாகியுள்ளது.

அமெரிக்காவின் இந்த நல்ல சகுனம் ஈழத் தமிழ் மக்களின் நியாயமான உரிமைப் போராட்டத்திற்கு நல்லதொரு தீர்வை பெற்றுத்தர உந்து சக்தியாக, உறுதுணையாக அமையவேண்டும் என தமிழ் மக்களும், நாட்டில் அமைதி சமாதானம் நிலைக்க வேண்டும் என அவாவுறும் நல்ல உள்ளங்களும் விரும்புகின்றன.

## தமிழ் ஊடகவியலாளர் சிவராமின் படுகொலைக்கு உரிமை கோருகிறது 'தேரவாத பௌத்த அமைப்பு'

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலைக்கு 'தேரவாத பௌத்த அமைப்பு' உரிமை கோரியுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்திற்கு அது அனுப்பி வைத்துள்ள கொலை மடலில்,

தாய்நாட்டின் எதிரிகளாக அவர்கள் அறிஞர்களாகவோ புத்திஜவிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களாகவோ யாராக இருப்பினும் விரைவில் நாட்டிற்கு உரமாக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவின் சார்பில் அதன் மேல்மாகாண பிரிவின் சார்பில் சேனாதிபதி மாயாதுன்ன என்பவர் அனுப்பிவைத்துள்ள மேற்படி செய்தியில்,

ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் கடந்த காலங்களில் எவ்வளவு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதிலும் உலக ஏகாதிபத்தியம் எமது நாட்டை தம்வசப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் சளைக்கவில்லை.

இந்த சக்திகள், தேசிய விடுதலைப் போராட்டம் என்னும் போர்வையில் நாட்டைக் கூறுபோட நினைக்கும் வன்னிப் புலி-களுடன் கைகோர்த்த வண்ணம் செயற்படுகின்றன. புலிகள் சமாதானம் என்ற கோசத்துடன் ஈழத்தை அமைப்பதில் படிப் படியாக முன்னேறி வருகின்றனர்.

இந்நிலையில் இதனை நிறைவேற்ற நோர்வே வெள்ளைப் புலிகளும, ஐ.தே.க. பச்சைப்புலிகளும் இணைந்து தமது டொலர் முடிச்சுக்களை காட்டி நீலப்புலிகள் குழுவொன்றையும் அமைத்து வருகின்றன.

அறிஞர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள என்னும் சாட்டில் துரோகிகளையும் அணிதிரட்டி வருகின்றனர். சிவராம் என்பவர் இவர்களில் ஒருவராவர். இவரது துரோகத்தனத்திற்கு நாம் 28.04.05 அன்று இரவு 11.20க்கு முடிவு கட்டிவட்டோம். இவர் இலங்கையின் நற்பெயரை சர்வதேசத்தின் முன்னிலையில் களங்கப்படுத்திய துரோகியாவார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-6)

## யசூசி அகாஷி - பிரதமர் சந்திப்பு; பலதரப்பட்ட விடயங்கள் ஆராய்வு

(கொழும்பு)

சுனாமிப் பொதுக்கட்டமைப்புக்கும், உதவி வழங்கும் நாடுக்ளின் பொதுக்கட்டமைப்புக்குமிடையே தொடர்பு ஒன்று இருப்பதாக இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட யசூசி அகாஷி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய போதே இதனைத் தெரிவித்தார்.

பொதுக கட்டமைப்புக்கும் உதவி வழங்கும் நாடுகளுக்குமிடையே தொடர்பு இருந்தாலும் நிபந்தனை அடிப்படையிலான உடன்பாடு ஒன்று இல்லை.

ஆனால் இங்கு நிபந்தனை அல்லது முன்நிபந்தனை என்ற சொல்லைப் பயன்படுத்த நான் விரும்பவில்லை. இது இரண்டுக்குமிடையே தொடர்பு உள்ளது.

எனினும், இதற்கு இடையில் நிபந்தனை ரீதியான தொடர்பு இல்லை என்றும் யசூசி அகாஷி மேலும் தெரிவித்தார்.

மேலும் இச் சந்திப்பின் போது சமாதான முயற்சிகள், பொதுககட்டமைப்பு, உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு மற்றும சுனாமிப் புனரமைப்பு என்பன குறித்தும் விரிவான பேச்சு நடாத்தப்பட்டது. (ற-8)

## மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்த்து இன்று ஆர்ப்பாட்டமும், சத்தியாக்கிரகமும்

(கொழும்பு)

மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் சத்தியாக்கிரகமும் இன்று காலை 10.30 மணிக்கு தலவாக்கொல்லை ஹட்டன் வீதியில் நடைபெறவுள்ளன.

இது தொடர்பாக மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் அமைப்பாளர் இ.தம்பையா கருத்துத் தெரிவிக்கையில்,

மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கததின் பிரதான எதிர்ப்பு நடவடிக்கையான ஆர்ப்பாட்டமும் சத்தியாககிரகமும் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இதில் தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தகர்கள் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதேவேளை இன்று தொழிலாளர்கள் வேலைக்கு செல்லாதும், வர்த்தகர்கள் கடைகன்ள மூடியும் மலையகமெங்கும் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டும் எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் மேல் கொத்மலைத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த அனைவரும் ஐக்கியப்பட்டு போராட்டத்தில இணைந்துகொள்ள வேண்டுமென மேல் கொத்மலைத திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் அமைப்பாளர் தெரிவித்தார். (க-9)

## கொலை மிரட்டல் தொடர்பாக பொலிஸ்மா அதிபர் விசாரணை

உலகறிந்த ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் படுகொலைக்குப் பொறுப்பேற்றும், பலவேறு முக்கிய ஊடகவியலாளர்களுக்கு கொலை மிரட்டல் அனுப்பியும் உள்ள ஆயுதக குழு தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் உள்ளிட்ட பல்வேறு ஊடகவியலாளர்களுக்கு அநாமதேய அமைப்பு ஒன்று கொலை மிரட்டல் கடிதம் ஒன்றை அண்மையில் அனுப்பி இருந்தது.

இது தொடர்பாக பொலிஸ் மா அதிபருக்கு புகார் அனுப்பியதைத் தொடர்ந்து அவர் இந்த உறுதியை அளித்துள்ளார்.

இருப்பினும் மாமனிதர் சிவராம் படுகொலை செய்யப்பட்டு இருவாரங்கள் கடந்த நிலையில் பொலிஸ் விசாரணையில் முன்னேற்றம் எதுவும் இல்லாதது குறித்து பொது மக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் விசனம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

## வில்லுப் பாட்டுக் குழுவுக்கு இசைக் கருவிகள் வழங்கி உதவி

(யாழ்ப்பாணம்)

உரிய உதவிகள் இன்றி தாங்கள் சார்ந்த கலைகளை வளர்கக இயலாமலும், வாழ்க்கையில் பின்தங்கிய நிலையை அடைந்து அல்லல்படும் தமிழ்க் கலைஞர்களை ஊக்குவிக்கும வகையில், கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி, வாழ்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, கலைஞர் ரி.சண்முகநாதனின் சோக்கெல்லோ சண்முகம் வில்லுப்பாட்டுக் குழுவுக்கு வில்லுப்பாட்டு கலை நிகழ்வுகளை நடாத்துவதற்கு வசதியாக இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான இசைக்கருவிகளையும் 50 ஆயிரம் ரூபா நிதியையும் தனது அமைச்சின் சார்பில் கடந்த 11 ஆம் திகதி வழங்கி னார்.

ஏற்கனவே கலைஞர் 'சோக்கெல்லோ' சண்முகநாதனுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) சார்பாக 10 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி இசைக்கருவிகளையும், நிதிகளையும் வழங்கிய வைபவம் கலைஞர் ரி.சண்முகநாதன் தலைமையிலான கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் குறிப்பிட்ட அமைசசில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அமைச்சரும் இந்து விவகாரங்களுக்கான ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதமும் அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (க)

## தகவல்களை வழங்குமாறு மே.மு.நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி ஆகியவற்றுக்கு ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கலாநிதி சந்திரதாச நாணயக்கார அறிவித்தல் கொடுத்துள்ளாா.

எதிர்வரும் 19 ஆம் திகதி விசாரணைக் குழுவின் முன் ஆஜராகுமாறும் இரு கட்சிகளின் மாகாணசபை உறுப்பினாகளுக்கும் நீதிபதி அறிவித்திருக்கிறார். (க-7)

## மின்சார சபையை மறுசீரமைக்க விசேட குழு நியமிக்கப்படும்

(கொழும்பு)

அரச தொழிற்சங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவறறின் பிரதிநிதிகள் இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பான உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இது தொடர்பாக நடைபெற்ற விசேட கூட்டததிற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமை வகித்தார்.

மறுசீரமைப்பு வழிமுறை தொடர்பாக நகல் ஒன்றை தயாரிப்பதற்கு 11 கல்விமான்களைக் கொண்ட விசேட குழுவொன்றை நியமிப்பதற்கும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நகல் அடுத்தமாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் புதிய பிரேரணை குறித்து பூரண நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (க-7)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

'நான்' என்ற அகங்காரம் மறையாத வரையில்- 'இந்த உடலே நாம்' என்று நாம் நினைக்கும் வரையில்- பிறரிடமிருந்து நம்மைப்பிரித்து 'நான்' என்று தனிப்பட்ட ஒருவராக நம்மை நினைக்கும் வரையில் 'சுயம்' என்ற சொல்லுக்கு உரிய பொருள் குறுகிவிடுகிறது. இந்தக் குறுகிய மனப்பான்மை நம்மை சுயநலம் மிகுந்த எல்லாச் செயல்களிலும் ஈடுபடவைக்கிறது.

சுவாமி விவேகானந்தர்

## தெய்வீகவிழா

திருஞானசம்பந்த சுவாமிகள் அற்புத உற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், இன்று ஞாயிற்றுக் கிழமை முதல் ஒருவார காலத்திற்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் 'திரு நெறிய தெய்வீகவிழாவை' நடத்தவுள்ளது.

இன்று மாலை 4.30 மணிக்கு செஞ் சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமை யில் இடம்பெறும் இந்நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவு, திருமுறை அரங்கு, இசைக் கச்சேரி, வில்லிசை, பரதநாட்டியம், இசை நாடகம், பட்டிமன்றம், கவியரங்கு என்பன நடைபெறவுள்ளது. (ற-8)

## திறப்புவிழா

தாமோதரம்பிள்ளை வீதி சங்கத்தானை சாவகச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள சர்வ தேச தமிழீழ மாணவர் பேரவையின் இல வச கணினிக் கல்விநிலையத் திறப்புவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர் வி.விஜயரூபன் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பேராசிரியர் க.கந்தசாமி பிர தம விருந்தினராகவும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் சந்திரசேகரம், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் யோ.கலைவிழி, யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி.கிருஷ்ணா ஆகியோர் சிறப்புவிருந்தின ராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-2)

# உதவிவழங்கும் மாநாட்டை நிறுத்துமாறு பொது அமைப்புக்கள் கோரவுள்ளன

நாளையும், நாளை மறுதினமும் கண்டி யில் நடத்தப்படவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டை இடைநிறுத்துமாறு யாழ்ப்பாணப் பொது அமைப்புக்கள் உதவிவழங்கும் நாடுகளை கோரவுள்ளன.

மின்னஞ்சல் மற்றும் தொலைநகல் ஊடாகப் பொது அமைப்புக்கள் இந்தக் கோரிக்கையை இலங்கைக்கு உதவும் நாடுகளிடம் விடுக்கவுள்ளன.

நாளையும், நாளை மறுதினமும் கண் டியில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் மாநாட்டின் மூலம் கிடைக்கப்போகும் நிதி வடக்குக் கிழக்கு மக்களுக்கு உரியமுறையில் பகிர்ந் தளிக்கப்படாது என்பது உண்மை. இத னால் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உரு வாக்கிய பின்னரே இந்த மாநாட்டை நடத்தவேண்டும்.

அதுதவறின் மாநாட்டின் மூலம் கிடைக் கும் நிதிகள் தமிழ்மக்களுக்குப் பயன் படாது. பதிலாக தமிழ்மக்களை அழிக்கும் போர் நடவடிக்கைகளுக்கே பயன்படுத்தப் படுமெனவும் பொது அமைப்புக்கள் சுட்டிக் காட்டவுள்ளன. (க-10,101,43)

## மாமனிதர் டி.சிவராமிற்கு யாழில் அஞ்சலிக் கூட்டம்

(திருநெல்வேலி)

சிரேஷ்ட ஊடகவியலாளர் மாமனிதர் டி.சிவராமிற்கு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் மாபெரும் அஞ்சலிக் கூட்டம் இடம்பெற வுள்ளது. யாழ். ஊடகவியலாளர்கள் ஒன்றி ணைந்து இதற்கான ஏற்பாட்டை மேற் கொண்டுள்ளனர். ஊடகவளங்கள் நிலைய இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முக தாஸ் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும்.

இந்த அஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழ்த்தேசியக் கூட்டமைப் பின் மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி, சுதந்திர ஊடக அமைப்பைச் சேர்ந்த சுனந்த தேசப் பிரிய, குமார் ரூபசிங்க, முஸ்லிம் ஊடக அமைப்பைச் சேர்ந்த அமீன், யாழ். ஊடக வியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல் வம், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி, வன்னி ஊடகவியலாளர் சங்கத்தைச் சேர்ந்த க.தனகரவி ஆகியோர் அஞ்சலி உரையாற்றவுள்ளனர்.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இலங்கையின் பல பாகத்திலிருந்தும் ஊடக வியலாளர்கள் வருகைதரவுள்ளனர்.(ச-43)

## சடலம் நேற்று கரையொதுங்கியது

(திருகோணமலை)

திருகோணமலை அலுத் தோட்டப்பகுதி கடலோரப் பிரதேசத்தில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று நேற்றிரவு 9 மணியவில் கரையொதுங்கியுள்ளது.

45 வயது மதிக்கத்தக்க ஆணின் சட லமே கரையொதுங்கியதாகும். தலையில் பலத்த காயத்துடன் கரையொதுங்கிய சட லம், தற்போது திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் வைக்கப்பட் டுள்ளது. (இ-4)

### பொதுக்கட்டமைப்பு உருவாகாவிட்டால்...

மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் தொடர்ச் சியாக கொலைகள் நடைபெற்று வருகின் றன.

நாம் எந்தத் தரப்பையும் குற்றம்சொல்ல விரும்பவில்லை. ஆனால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறையாக செயற்படுத்தவேண் டும் என்பதே எங்களது கவலை.

அரசியல் தலைவர்கள் தங்களது பாது காப்புகளை முன்னைவிட பலப்படுத்த வேண்டியநிலை இருக்கிறது. பல்வேறு குழுக்களிடையே உள்ள அவநம்பிக்கை கள் அதிகரித்துள்ளதால் படுகொலைகள் அதிகரித்து வருகின்றன.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவ தில் ஜனாதிபதி சந்திரிகாவின் நிலையை பாராட்டுகிறோம். விரைவில் பொதுக்கட்ட மைப்பிற்கு அவர் இறுதிவடிவம் அளிப்பார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சந்தே கங்களையும், அச்சங்களையும் எழுப்புகிற வர்களுடன் உரியமுறையில் பேசி இணக் கமான தீர்வை ஜனாதிபதி சந்திரிகா ஏற் படுத்துவார் என்று நாம் நம்புகிறோம்.

விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசியபோது, ஆழிப்பேரலை யால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவும் வகையில் விரைவில் பொதுக்கட் டமைப்பு உருவாக்கப்படும் என்று நம்பிக் கையும், எதிர்பார்ப்பும் இருக்கிறது.

இருந்தபோதும் பொதுக்கட்டமைப்பை இலங்கை அரசு உருவாக்காவிட்டாலும் மாற்று ஒழுங்கமைவு ஒன்றை உதவி வழங்கும் நாடுகள் மேற்கொள்ளும்.

கண்டியில் நடைபெறுகிற உதவி வழங் கும் நாடுகளின் மாநாட்டில் தமது தரப்பை யும் அழைக்கவில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

யார் அழைக்கப்படவேண்டும் என்பது இலங்கை அரசின் முடிவு. ஆனாலும் புலி களை அம்மாநாட்டிற்கு அழைப்பதற்கான உரிய காரணங்கள் உள்ளன.

இருந்தபோதும் அரசின் முடிவுகளை நாங்கள் மதிக்கிறோம். ஜப்பான் மற்றும் இதர உதவிவழங்கும் நாடுகள் இலங்கை யின் உள் அரசியல் விவகாரங்களில் ஒரு போதும் தலையிடாது என்றார். (இ-04,08)

### மட்டக்களப்பில்...

பதில் நீதிபதி வினோபா இந்திரன் நேற்று மாலை மரணவிசாரணையினை மேற் கொண்டு சடலத்தை தாயாரிடம் ஒப்படைக் குமாறு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குதலை ஒத்திவைத்தார். (இ-4,9)

### தமிழ்ச்செல்வன்...

அக்கியோ சூடாவும் உடனிருந்தார். இச் சந்திப்பில் பொதுக்கட்டமைப்பு விவகாரம், சமாதான முயற்சிகளின் தேக்கநிலை, கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங் கும் நாடுகளின் கூட்டம் தொடர்பாக ஆரா யப்பட்டதாக தெரியவருகிறது.(இ-4)

### ஜே.வி.பியைப்போல் ...

ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்தோம்.

வன்முறையில் ஈடுபட்டுள்ள கட்சிகள் ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்துள்ளமை யினால் விடுதலைப் புலிகள் இயக்கமும் என்றோ ஒருநாள் அவ்வாறு ஜனநாயக நீரோட்டத்திற்குள் இணைந்துகொள்வார் கள் என்ற எதிர்பார்ப்புடனேயே புலிகளு டன் பேச்சுவார்த்தை நடத்துவதாக ஜனா திபதி சந்திரிகா குமாரதுங்க அப்போது தெரிவித்திருந்தார்.

ஆனால் புலிகள் ஜன்நாயக நீரோட்டத் திற்கு வரமாட்டார்கள் என்றே எமக்குத் தோன்றுகிறது. இன்று அரசாங்கத்தில் 9 கட்சிகள் உள்ளன. வன்முறைகளை முன்னர் செய்த மற்றைய பல கட்சிகள் தற்போது ஜனநாயக நீரோட்டத்தில் வந்து அரசாங்கத்தில் அமைச்சுக்களை ஏற்று சிறந்தமுறையில் மக்களுக்காகச் செயற் படுவது போன்று புலிகள் அமைப்பையும் இந்த நிலைக்குக் கொண்டுவரவேண்டும். இந்த எதிர்பார்ப்புடனேயே நாம் இருக் கிறோம்.

இந்த நாட்டில் ஜனநாயகத்தையும், மனிதஉரிமைகளையும் நிலைநிறுத்துவதே எமது நோக்கமாக இருந்தது என்று அமர சிங்க மேலும் தெரிவித்தார். (இ-8)

## கண்டி மாநாட்டிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்தி

(கண்டி)

கண்டியில் நடைபெறவுள்ள இலங் கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட் டிற்கான சகல பாதுகாப்பு ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக அப்பிராந்தியத் திற்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குணதிலக பண்டார தெரிவித்தார்.

மாநாட்டு பாதுகாப்புக் கடமையில் 1000 இற்கும் மேற்பட்ட பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். நேற்றுக் கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் தெரி வித்தார்.

மாநாடு நடைபெறும் 16ஆம், 17 ஆம் திகதிகளில் கண்டி நகரத்துக்குள் வாக னங்களை நிறுத்துவதற்கு தடைவிதிக்கப் பட்டுள்ளது. இத்தடையை மீறி வாகனங் களை நிறுத்தும்பட்சத்தில் குறித்த சாரதி கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும்தெரிவித்தார்.(ச-8)

### அகதிமுகாமில்...

தெரிவித்தனர்.

உயிரிழந்த சுந்தரம் பிள்ளையான் சந்தி வெளியைச் சேர்ந்தவர் என்றும், கடந்த நான்கு வருடங்களாக அக்கரைப்பற்றில் வசிப்பவர் என்றும் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)

### கண்டிக் கூட்டம்...

உதவிவழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை அரசின் பிரதிநிதிகள், விசேட மாக ஜப்பானின் விசேட சமாதான பிரதி நிதி யசூசி அகாசியும் கலந்துகொள்ள வுள்ளார்.

இந்த மாநாட்டில் இலங்கைக்கு எதிர் காலத்தில் வழங்கவுள்ள நிதி, ஒதுக்கப் பட்ட நிதியில் அரசாங்கத்தை வந்தடை யாத நிதி உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது. (இ-08)

## நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உழவு இயந்திரம் நேற்றுமுன்தினம் மாலை பற்றிக்ஸ் சந்தியில் திருப்பும்போது தடம் புரண்டதில் நால்வர் காயமடைந்தனர்.

உழவு இயந்திரத்தின் பெட்டியிலிருந்து சென்ற எஸ்.இரவீந்திரன் (மாதகல்), கே.துரைசிங்கம் (சண்டிலிப்பாய்), எம். கணேசலிங்கம் (தெல்லிப்பழை), என். விசிந்தன் (சண்டிலிப்பாய்) ஆகிய நான்கு பேரும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர். (ற-19)


கருத்தரங்கு
A/L 2005
முன்பு அறிவித்ததுபோல்
NEW SCIENCE HALLஇல்
நடைபெறும்
கணக்கீடு
D.SAM

| திகதி | பகுதி | நேரம் |
|---|---|---|
| 16/05 | I | 9.00 - 1.00 |
| 17/05 | II | 9.00 - 1.00 |

DMI
JAFFNA
(C-1372)














இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.